Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளிமஞ்சரி

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 16 (29.4.94) வெள்ளிக்கிழமை ஓசை 70

## புழுப்பிடித்த இறைச்சி விற்பனை செய்தவர் கைது

பாவனைக்குதவாத மாட்டிறைச்சி விற்ற சம்பவம் தொடர்பாக, கடை உரிமையாளர் ஒருவர் உடுவில் மல்வம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார். மேற்படி இறைச்சிக் கடையில் சுன்னாகம் காவல்துறையினர் திடீர் பரிசோதனை செய்த போதே பாவனைக்குதவாத புழுப்பிடித்த நிலையில் இறைச்சியும் சுகாதாரப் பரிசோதகரால். முத்திரையிடப்படாத இறைச்சியும் விற்பனை செய்யப்பட இருந்தமை கண்டு பிடிக்கப் பட்டு அழிக்கப்பட்டது. (09), 11)

# புலிகள் - இராணுவம் வன்னியில் மோதல்

## 3 படையினர் படுகாயம்

(கொழும்பு)

மூதூர் மற்றும் மட்டக்களப்புக் காடுகளில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று ஏற்பட்ட மோதலில் பல சிறிலங்கா படையினர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் படுகாயமடைந்த மூன்று பேர் உலங்குவா

(12 பக்கம் பார்க்க)

## படையினர் தரப்பில் பலத்த சேதம்; ஐந்து புலிகள் வீரச்சாவு

(வவுனியா)

**வவுனியா மாவட்டத்தில் பூவரசம்குளம் பகுதியை நோக்கி முன்னேறிய இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இம்மோதல்களில் இராணுவத்தரப்பில் பலத்த சேதங்கள் ஏற்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் தரப்பில் ஐந்து போராளிகள் வீரச்சாவடைந்ததாகவும் அறியவருகின்றது.**

வவுனியா மாவட்டத்தில் ஒப்பரேசன் 'ஜெயமக' எனப் பெயரிடப்பட்ட படை நடவடிக்கை கடந்த 25 ஆம் திகதி இராணுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்டமை தெரிந்ததே.

செட்டிகுளம் இராணுவ முகாமில்இருந்தும், வவுனியா-பம்பைமடுப் பகுதியிலும்இருந்தும் வெளியேறிய இராணுவத்தினர் மன்னார் வீதியிலுள்ள பூவரசம்குளம் நோக்கி முன்னேறியதாகவும் விடுதலைப் புலிகள இராணுவத்தினரை எதிர்த்து தாககுதல் நடத்தியதாகவும் தெரிய வருகின்றது.

இதேசமயம் தாக்குதலில் ஈடுபடும் இராணுவத்தினருக்கு துணையாக விமானப் படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்களும், உலங்குவானூர்திகளும் பலத்த குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம் மோதல்களில் மடுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் ஐந்து விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர். இப் போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்

(12ம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவடைந்த போராளிகள் விபரம்

வன்னி மாவட்டம் மடுக்குளம பகுதியில் நேற்று முன்தினம் காலை 4-15 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் முன்னேறி வந்த சிறிலங்காஇராணுவத்தினருக்கும் இடையே இடம்பெற்றநேரடி மோதலில் ஐந்து போராளிகள் வீரச்சாவடைந்தனர்,

வீரச்சாவடைந்த போராளிகளான கப்டன் அமல்ராஜ்-நேசன் (ஆசீர்வாதம் ரவீந்திரன், 3ஆம் கட்டை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு] லெப்டினன்ட் ரூபன் துரைசிங்க ) சுதாகர், கண்டவளை பண்டிசுட்டான், பரந்தன், கிளிநொச்சி), 2ஆம் லெப்டினன்ட் இளங்குமணன் - நெடுமாறன் (தர்மசீலன் தர்மதாசன், இல. 93 சிவநகர் உருத்திரபுரம், கிளிநொச்சி) வீரவேங்கை சின்னக்கண்ணன். [சத்திவேலு சிவக்குமார், மதினாநகர் இரணை இலுப்பைக்குளம் வவுனியா) வீரவேங்கை சிவச்செல்வன் (கிருஸ்ணபிள்ளை கோணேஸ்வரன்- மோகன் (மணியங்குளம் ஸ்கந்தபுரம், கிளிநொச்சி) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## செட்டிகுளம் மோதலில் ஏழு ராணுவத்தினர் காயம்

வவுனியா செட்டிகுளம் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் ஏழு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

அச் செய்தியில் மேலும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த இராணுவத்தினரை நோக்கி விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல் மேற்கொண்டதாகவும் அத்தாக்குதலிலேயே ஏழு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் தெரிவித்தது.

## வடக்கில் பாரிய இராணுவ தாக்குதல் இன்னமும் ஆரம்பிக்கவில்லை

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

தற்பொழுது வடக்கில் வரையறுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையே இடம் பெறுவதாகவும், இன்னமும் அங்கு பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படவில்லை என்றும் சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனுகுலதுங்க தெரிவித்ததாக அரச சார்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

வடபகுதி மீதான பாரிய இராணுவ நடவடிக்கை திடீர் என்று ஆரம்பிக்கப்படும் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## கட்டடம் இடிந்து வீழ்ந்து சிறுவன் பலி; பெண் காயம்

கட்டடமொன்றின் கொங்கிறீற் கூரை இடிந்து வீழ்ந்ததால் சிறுவன் தலை பிளந்து பலியான சம்பவம் ஒன்று நேற்று மாலை 4 15 மணியளவில் இணுவிலில் இடம் பெற்றது.

மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் வசித்து வரும் இணுவில் காளிங்கன் தியேட்டர் முகாமிலேயே இச் சம்பவம் நடைபெற்றது. காற்றுக்காக மேற்படி தியேட்டர் கட்டடத்தின் வெளி விறாந்தையில் படுத்திருந்த ஜெயராசசிங்கம்ஜெயகாந்தன் (14) எனும் சிறுவனே மேலிருந்த கொங்கிறீற் பிளாட் இடிந்து வீழ்ந்ததல் தலை பிளந்து பரிதாபமாகப் பலியானார் இச் சம்பவத்தில் நடராசாசெல்வரத்தினம்(70) என்னும் வயோதிப மாது இரு கால்களும் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (09) (11)

## ஐ. தே. க. உட்கட்சிப் பூசலால் டி.பியின் சீன விஜயம் ரத்து

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அடுத்த மாதம் சீனாவுக்கு மேற் கொள்ள விருந்த அரச முறைப் பயணத்தை பின்போட்டுள்ளார்.

யு. என். பியில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பத்தை அடுத்து அவர் தமது சீனா பயணத்தை ஒத்திவைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

சிறிலங்காவின் தெற்குப் பகுதியில் நடந்த மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சிக்குக் கிடைத்த எதிர்பாராத தோல்வி மறைமுகமான அதிகாரப் போராட்டத்திற்கு வழிவகுத்திருக்கிறது. ஜனாதிபதிக்குப் பின்னால் யு. என். பி. ஒற்றுமையாக நிற்கிறது எனக் கட்சித் தலைவர்கள் மேல்வாரியாகக் கூறி வருகின்றார். ஆனால் கட்சிச் சகாக்களின் பூரண விசுவாசம் தமக்கு இருக்கிறது என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு இல்லை என்பதை அவர் தனது சீன விஜயத்தை ரத்துச் செய்ய எடுத்த முடிவு கோடி காட்டுகிறது: என்று பி. பி. ஸியின் புதிய செய்தியாளர் ஜார்ஜ் ஆர்னி மேலும் தெரிவிக்கிறார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் யு என். பியின் பொதுச் செயலாளர் சிறிசேன கூரேயை இராஜினாமாச் செய்யும் படி ஜனாதிபதி விஜேதுங்கா கேட்டிருப்பதாக கட்சியின் மூத்த தரப்

(12-ம் பக்கம் பார்க்க)

## செயலாளர் பதவியை கூரே ராஜினாமா செய்வார்?

(கொழும்பு)

யு. என். பியின் பொதுச் செயலர் சிறிசேன கூரே தமது பதவியை இராஜினாமாச் செய்யவுள்ளதாக அவருக்கு நெருங்கிய வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதிக்கும் கூரேக்கும் அபிப்பிராய பேதம் வலுத்திருப்பதை அடுத்து, வரும் புதன்கிழமை கட்சியின் பொதுக் குழுக் கூட்டம் கூடும் போது, கூரே தமது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பிப்பார் எனத் தெரிய வருகிறது.

## கொத்து அளவு முறை அடுத்த வாரம் முதல் நீக்கம்

எதிர்வரும் 9 ஆம் திகதியிலிருந்து வாணிப நடவடிக்கைகளில் கொத்துகளைப் பயன்படுத்துவது நீக்கப்பட்டுள்ளது எனவும் அரிசியின் விலைக் கட்டுப்பாடு குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித் துறையினர் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளனர்.

இவ்வறிவித்தலின் முழு விபரமும் வருமாறு:

அரிசியினைக் கட்டுப்பாட்டு விலையில் விற்குமாறு அனைத்து வாணிபர்களுக்கும் நாம் பலமுறைவேண்டுகோள் விடுத்திருந்தோம் முதலில் 6-4-94 இல் 'பொதுமக்கள் கவனத்திற்கு' என்ற தலைப்பில் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டோம். செய்தியேடுகளிலும் இதுபற்றிய செய்தி வெளியானது மேலும் எமது வருவாய்ப்பகுதிச் செயலகத்தின் ஊடாக ஒவ்வொரு வாணிபருக்கும் இவ்வறிவித்தல் வழங்கப்பட்டதுடன் இவ்வெளியீட்டைக் கடைகளில் பொதுமக்

(12 பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்



### தூக்குமேடைக்குறிப்பு

பெர்லினில் தூக்கிலிடப்பட்ட ஜூலிஸ் பூசிக் சிறையிலிருந்தபோது எழுதப்பட்ட சிறைக்குறிப்புகள் விற்பனையாகிறது வசந்தம் புத்தக நிலையம். (8088)

### திருக்கல் வண்டில்

மிகச்சிறந்த நிலைமை புத்தம்புதிய தோற்றம் திருக்கல் வண்டில் விற்பனைக்கு உண்டு மில்க்வைற், 525/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி/9276)

### ஆங்கிலம்

ஆண்டு 11, 10-க்குரிய ஆங்கில வகுப்புகளும் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களுக்குரிய விசேட ஆங்கில வகுப்புகளும் ஆரம்பமாகியுள்ளன சம்றொக் யாழ் சுண்டுக்குளி. (8147)

### காவேரி சீயாக்காய்ப் பவுடர்

இன்று தமிழீழத்தில் மிகவும் மக்கள் விரும்பிப் பாவிக்கும் சீயாக்காய்ப் பவுடரின் தரம் நிரந்தரம் சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்காதீர்கள் காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். (7898)

### அணுசக்தி முன்னேற்றப்பாதையா? முட்டுக்கட்டையா?

பிரச்சினைகள், பயன்கள் விளைவுகள், அணுவின்விலை, அணுவாயுத அதிகரிப்பு, இன்னும் பல அணுபற்றிய கட்டுரைகளுடன் விற்பனையாகிறது வசந்தம் புத்தக நிலையம். (8087)

### பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத்தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கிறோம்.
TASTELINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane JAFFNA (சி-9053)

### (O.L) MATHS

G.C.E. (O-L)-ல் கட்டாய பாடமாகிய கணிதபாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே யில்லாதவர்களுக்கும் 27 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinetion பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி சுண்டுக்குளி (8156)



### தவறிவிட்டது

28-4-1994 வியாழக்கிழமை அன்று யாழ் போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பகுதியில் (நரம்பு கிளினிக்) ரூபா 27,000/- தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (8160)

### தடகள போட்டிகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்றும் நாளையும் வடமராட்சி கிழக்கு மாமுனை விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலர் திரு க. கனகரத்தினம் தலைமையில் நடைபெறுகின்றது. இரண்டாவது நாள் நடைபெறும் பரிசளிப்பு விழாவிலே யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் திரு. செ பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார். (25)



## LONDON ACCOUNTANCY

CLASSES NOV / DEC – 1994

**C. I. M. A. - Stage - I**
**A. A. T. - Prelim**
**- Inter**
**I. A. B. - Found**
**- (Inter & Finals**

ஆரம்பம் 18 06-1994)

ஆரம்பம்: 07. 05.1994

விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane,
JAFFNA.

(சி-9296)



## நினைவு கூருகின்றோம்...

## 1994-04-29

1986-ம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - வட்டுக்கோட்டைப் பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**கப்டன் லிங்கம்** (சிங்காரவேல் செல்வக்குமார் - தெணியம்பை - வல்வெட்டித்துறை)

1988-ம் ஆண்டு மன்னார் - பரப்புக்கடந்தான் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**லெப். ஜீவன்** ( - மதியழகன் - திருமலை)

1991-ம் ஆண்டு மட்டு - மகிழடித்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பரமானந்தன்** (க, மனோகரன் - திருப்பழுகாமம் மட்டு)

மன்னார் - வஞ்சியன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**றேகன்** (முருகேசு கிருஷ்ணன் - எருவிட்டன் - மன்னார்)

**2-ம் லெப். கோணேஸ்** (பிரான்சிஸ் சிவகுமார் கோணேஸ் வீதி, மறவன்புலவு குடியேற்றத்திட்டம் (கொழும்பு)

கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். ஆனந்தன்** (பத்மநாதன் கமலநாதன் - அம்மன் கோயிலடி, கோண்டாவில் - யாழ்)

1992-ம் ஆண்டு பொலநறுவை-அழிஞ்சிப் பொத்தானைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப், யோகராசா** (நடராசா புவனேந்திரன் - வாழைச்சேனை - மட்டு)

பொலநறுவை கிராமங்களில் முஸ்லிம் ஊர்காவல் முஸ்லிம் பொலிசார் மற்றும் முஸ்லிம் காடையர்களின் அட்டூழியங்களில் சிறுவர்கள், பெண்கள் உட்பட 85 தமிழர்கள் வெட்டியும் சுட்டும் கொலைப்பட்டவர்கள்,

1993-ம் ஆண்டு வவுனியா -சாளம்பைக்குளம் காட்டுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரும் மற்றும் தேசவிரோதசக்திகளும் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப், புலித்தேவன்** (சின்னையா தெய்வேந்திரா - தோற்பிட்டி, கோப்பாய் தெற்கு -யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

சி 9284)



## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

## கலை/வர்த்தகம்/முகாமைத்துவம்

**1-ம், 2-ம், 3-ம், 4-ம் கல்வியாண்டு - ஆண்டு இறுதிப் பரீட்சை - 1993**

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதி வாய்ந்த சகல வருட மாணவர்களும் 15-5-1994இற்கு முன்பாக யாழ்/பல்கலைக் கழக பரீட்சைக் கிளையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் மீள் பரீட்சார்த்திகள் தகுந்த கட்டண பற்றுச் சீட்டுடன் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். இக் குறிப்பிட்ட திகதிக்கு பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

- பதிவாளர்

(சி-9293)

## அகில இலங்கை இளங்கலைஞர் மன்றம் மாதாந்த இசை நிகழ்ச்சி

திருநெல்வேலி - வேல்முருகன் கபே ஆதரவில்

இடம்; மன்றக் கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்

காலம்: 30-4-1994 சனி மாலை 5 மணி

### நிகழ்ச்சி நிரல்

மாலை 5-00 — 5.30

செல்வி தேவமனோகரி சதாசிவம்)
செல்வி ரூபிணி துரைசிங்கம் ) பாட்டு
செல்வி சுகன்யா சிவானந்தம் - வயலின்
செல்வன் ரதிரூபன் - மிருதங்கம்

5-30 — 6-00 வயலினிசை

செல்வி காஞ்சனா செல்வரத்தினம் - வயலின்
திரு. க. கண்ணதாசன் - மிருதங்கம்
திரு. ப. ரதிரூபன் - கடம்

6-00 — 7-00 பாட்டு

திரு. எஸ். குலசிங்கம் - பாட்டு
திரு. எஸ். கோபிதாஸ் - வயலின்
திரு. எஸ். கண்ணதாசன் - மிருதங்கம்
திரு. ம. சுஜன் - கடம்

7-00 — 7-30 மங்கள விளக்கேற்றல்

திரு. கோ. இலட்சுமணன் அவர்கள் (உரிமையாளர் வேல்முருகன் கபே திருநெல்வேலி)
திரு. சி. சச்சிதானந்தசிவம் அவர்கள் (தலைவர், யாழ். சுருட்டு உற்பத்தியாளர் சங்கம்)

தலைமையுரை; திரு மு. பரமேஸ்வரன் அவர்கள்) (அதிபர், செங்குந்தா இந்துக் கல்லூரி)

அருளுரை: சிவஸ்ரீ ப. மனோகரக்குருக்கள் (பிரதமகுரு, சிவன்கோவில் வல்வெட்டித்துறை)

பிரதம விருந்தினர் உரை: திரு. ஆர். எஸ். நடராசா அவர்கள் (அதிபர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

7-30 — 8-15 நாடகம்

பாஷையூர் கலைஞர்கள் வழங்கும் 'தியாகத் தாய்'

8-15 — 9-30 வில்லிசை

கலாவிநோதன் சின்னமணி குழுவினர் வழங்கும் ''தியாகதீபம்'' வில்லிசை நிகழ்ச்சி

கலா ரசிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்!

(சி 9295) மேற்படி மன்றத்தினர்

## உடைத்த கல் வீதி திருத்த வேலைக்காக விநியோகித்தல்

2'', 3/4'' அளவு உடைய உடைத்த சல்லிக் கல் வீதி திருத்த வேலைக்கு பெருமளவில் தேவைப்படுகின்றது. இக் கல்லினை விநியோகிக்கக் கூடியவர்கள் 5-5-1994 ஆம் திகதிக்கு முன்னர், திட்டமிடல் பகுதி, செயலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு பின்வரும் விபரங்களுடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

1. பெயர்
2. விலாசம்
3. கல் உடைக்கும் இடத்தின் விலாசம்
4. ஒரு கியூப் 2'', 3/4'' கல் உடைத்த இடத்தில் வைத்து வழங்குவதற்கான விலை
5. மாதம் ஒன்றிற்கு ஒவ்வொரு வகையிலும் கொடுக்கக் கூடிய அளவு,

**கா. மாணிக்கவாசகர்**
அரச அதிபர்
யாழ். மாவட்டம்.

(சி-9298)

## முக்கிய அறிவித்தல்

சமாசத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கிளைச் சங்க பிராந்தியங்களில் இருந்தும் எமது உறுப்பினர்கள் தொழிலாளர்கள், கிராமியத் தொழிலாளர்கள், நிலைய உரிமையாளர்கள், மாணவ, மாணவிகள் என குடும்ப சகிதமாய் மேதின எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டு தமிழீழ மக்களின் ஒற்றுமை உணர்வை உலகிற்கு உணர்த்திட வேண்டும் என அன்புடன் வேண்டுகின்றோம்.

மேதினம் அன்று பகல் 11 மணிக்கு சமாச அலுவலகத்தில் ஒன்று கூடவும்.

**வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்**

- நிர்வாகம்

(8155)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# மனிதனும் வரலாறும்

## 2

ஹேகல் படைத்த கருத்துலகின் மையக் கருத்தாக விளங்குவது இயங்கியல். இந்த இயங்கியல் தத்துவத்தின் (Philosophy of Dialectics) அடிப்படையிலேயே மனவுலகத்தையும் பொருளுலகத்தையும் அவர் விளக்க முனைந்தார். மனித நாகரீகத்திற்கும் உலக வரலாற்றிற்கும் வியாக்கியானம் அளித்தார். பிரபஞ்ச இயக்கத்தின் சூத்திரத்தையும் விபரிக்க விழைந்தார்.

ஹேகலின் இயங்கியல் தத்துவத்தை மார்க்சீய வரலாற்றியல் எவ்வாறு, எந்த வடிவத்தில் உள்வாங்கிக் கொண்டது என்பதை ஆராய்வதற்கு முன்னர், இந்தத் தத்துவம் என்ன சொல்கிறது என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

இந்த உலகம் நிலையானது அல்ல. இந்த உலகத்தில் எதுவுமே நிரந்தரமானது அல்ல. எதுவுமே நிச்சயமானதும் அல்ல. இந்த உலகம் சதா மாறிக்கொண்டிருக்கிறது. சதா அசைந்து கொண்டிருக்கிறது. சதா அவிழ்ந்து கொண்டிருக்கிறது.

அக உலகம் என்றாலும் சரி, புற உலகம் என்றாலும் சரி, எதிலும் எல்லாவற்றிலும் ஒரு பெயர்வு இருக்கிறது; ஒரு நகர்வு இருக்கிறது; ஒரு மலர்வு இருக்கிறது. அணுவிலிருந்து அண்டம் வரை எல்லாமே ஒரு இயக்கு சக்தியால் இயக்கப்படுகிறது.

காலம் என்பதும் இயக்கம்; வாழ்வு என்பதும் இயக்கம்; இருப்பு என்பதும் இயக்கம்: வரலாறு என்பதும் இயக்கம்.

இந்த இயக்கம், இலக்கின்றி சும்மா இயங்கவில்லை. இந்த இயக்கத்தின் இயக்கத்தில் ஒரு நிலை மாற்றம் நிகழ்கிறது; ஒரு புத்தாக்கம் பிறக்கிறது; ஒரு வளர்ச்சி தோன்றுகிறது; ஒரு முன்னேற்றம் ஏற்படுகிறது. இந்த இயக்கம் எல்லாவற்றையுமே ஒரு வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கி நகர்த்திச் செல்கிறது. உயர்நிலைக்கு இட்டுச் செல்கிறது.

மனித சிந்தனையிலும் இந்த இயக்கம் இருக்கிறது. மனித சமூகத்திலும் இந்த இயக்கம் இருக்கிறது. மனித வரலாற்றிலும் இந்த இயக்கம் இருக்கிறது. இயற்கையிலும் இந்த இயக்கம் இருக்கிறது. முழு உலகமுமே இந்தச் செயலியக்கப்படிமுறையில்தோற்றம் கொண்டு, வளர்ச்சிகண்டு, மாற்றமடைந்து, முன்னோக்கிய முனைப்பில் உண்டாகிச் செல்கிறது.

மனித மனம், சமூகம், இயற்கை என்ற ரீதியில் சகலவற்றையும் வளர்ச்சிப் படிமுறையில் நகர்த்திச் செல்லும் செயலியக்கத்திற்கு அடிப்படையான விதிகள் உள்ளன. இந்த இயங்கு விதிகள் பற்றிய தத்துவக் கோட்பாடே இயங்கியல் எனப்படும். இந்த இயங்கியல் விதிகளை ( Laws of Dialectics ) முதன் முதலாக நெறிப்படுத்திய பெருமை ஹேகலைச் சாரும்.

இந்த இயங்கியல் விதிகளில் அடிப்படையானது முரணியமாகும் ( Contradiction )

எந்தப் பொருளுக்கும் ஒரு தன்னியக்கம் இருக்கிறது. உள்ளீடான சுய - இயக்கம் இருக்கிறது. இந்தச் சுய - இயக்கம் முரணிய தன்மையைக் கொண்டது. அதாவது ஒன்றுக்கொன்று மாறான, முரணான எதிர்வுத் தன்மைகளைக் (Opposite Tendencies) கொண்டது. ஒரு பொருளில் இந்த எதிர்வுத் தன்மைகள் ஒன்றித்திருக்கும் நிலையை, எதிர்வுகளின் ஒன்றியம் ( Unity of the Opposites ) என்கிறார் ஹேகல். இந்த எதிர்வு சக்திகள் ஒன்றித்திருந்து, அதே சமயம் ஒன்றோடு ஒன்று முரண்பட்டு நிகழ்த்தும் பிணக்காக, போராட்டமாக அந்தப் பொருளின் வாழ்வியக்கம் அசைகிறது. இந்த முரண்பாடு முற்றி வெடிக்கும் பொழுது மாற்றம் நிகழ்கிறது. புதியது பிறக்கிறது. எனவே, எந்த ஒரு பொருளது இயக்கத்திற்கும், மாற்றத்திற்கும், புத்தாக்கத்திற்கும், புதிய வளர்ச்சிப் போக்கிற்கும் அந்தப் பொருளில் உள்ளீடாக, அதன் உள்ளியக்கமாகச் செயல்படும் முரணியமே காரணியாக இருக்கிறது. சிந்தனை உலகிலும் சரி, சமூக உலகிலும் சரி, இயற்கையின் சகல பொருட்களிலும் சரி, தோற்றம் மாற்றம் முன்னேற்றம் என்பன புற சக்திகளால் தூண்டப்படுவதல்ல. அது உள்ளீட்டாக, உள் - முரண்பாட்டின் உந்துதலால் நிகழ்கிறது.

இயங்கியலின் அடிப்படையிலேயே மனித மனம் படிநிலை வளர்ச்சி காண்கிறது என்கிறார் ஹேகல். இங்கும் முரணிய விதி முக்கிய இடம் பெறுகிறது. முரண்பாடான சிந்தனைகள் தோன்றி அவற்றின் தீர்வாக புதிய சிந்தனை பிறக்கிறது. காலப்போக்கில் அந்தப் புதிய சிந்தனையிலும் முரண்பாடு எழுந்து, அது களையப்பெறும்போது மேலும் செழுமை பெற்ற சிந்தனை வளர்கிறது. இவ்விதம் ஒரு முடிவில்லா முரணியச் சுழற்சியில் மனித மனமானது பரிணாம வளர்ச்சிகண்டு அகற்சி பெறுகிறது. மனித அறிவு முன்னேற்றம் காண்கிறது.

தர்க்கீகம்பற்றி ஹேகல் இரு நூல்களை எழுதியிருக்கிறார். இந்நூல்களில் அவரது இயங்கியல் தர்க்கீகம் (Dialectical Logic) விபரிக்கப்படுகிறது. முரணியம் மூலம் எண்ண இயக்கத்தின் முன்னோக்கிய நகர்வு தர்க்க ரீதியில் விளக்கப்படுகிறது. அதன் சாராம்சம் இது தான்.

முதலில் ஒரு எண்ணம் அல்லது சிந்தனை பிறக்கிறது. இது கருத்தாக்கம் (Thesis) எனப்படும். இந்தக் கருத்துக்கு மாறாக ஒரு எதிர்க்கருத்து எழுகிறது. இது முரண் கருத்தாக்கம் ( Anti - Thesis ) எனப்படும். ஒன்றுக்கு ஒன்று மாறான இவ்விரு கருத்துக்கள் மத்தியில் முரண்பாடு தோன்றுகிறது. இறுதியில், இம்முரணான கருத்துகள மத்தியில் ஒத்திசைவு ஏற்பட்டு, அதன் தீர்வாக ஒரு புதிய கருத்து பிறக்கிறது. இது கூட்டுக் கருத்தாக்கம் (Synthesis) எனப்படும். இந்தக் கூட்டுக் கருத்தாக்கம், காலகெதியில் மீண்டும் ஒரு கருத்தாக்கமாக முரண்பாட்டைச் சந்திக்கிறது. இவ்விதம், எண்ண இயக்கமானது இயங்கியலின் மும்முனைச் சுழற்சியில் முன்னேறிச் செல்கிறது.

ஹேகலின் இயங்கியல் தர்க்கீகத்தில் மனித சிந்தனையை உயர்நிலைக்கு இட்டுச் செல்லும் உந்துசக்தியாக முரணியமே செயற்படுகிறது. முரணியத்தால் நிகழும் மாற்றத்தை விளக்கும் வகையில் மேலும் சில இயங்கியல் விதிகளை அறிமுகப்படுத்துகிறார் ஹேகல். இவற்றில் எதிர்மறை ( Negation ), எதிர்மறையின் எதிர்மறை (Negation of the Negation) என்பன முக்

**▪ பிரம்மஞானி ▪**

கிய விதிகளாகும். எதிர்மறை என்பது ஒரு கருத்தாக்கத்தின் அல்லது ஒரு பொருளின், அல்லது ஒரு கட்டமைப்பின் நிலைமாற்றத்தை குறிப்பிடுகிறது. அதாவது ஒன்று செயலிழந்து, நிலைமாறி, அதன் சிதைவால் இன்னொன்றின் வளர்ச்சிக்கு ஏதுவாகும் மாற்றீட்டை இது பொருள்படுத்தும்.

உதாரணமாக, ஒரு கருத்துக்கு எதிராக முரண்பாடான இன்னொரு கருத்துத் தோன்றி, முன்னதை வாழாண்மை ஆக்குவதை எதிர்மறை என்கிறார் ஹேகல். பின்னர், முரணிய கருத்துக்கள் இரண்டுமே மாற்றமடைந்து புதிய கருத்தாக்கம் பிறக்கிறது. இவ்விதம் முரணிய கருத்துக்கள் செயலிழந்து செல்லுபடி அற்றுப் போவதை 'எதிர்மறையின் எதிர்மறை' என விளக்குகிறார் அவர். எதிர்மறையிலும் சரி, அல்லது எதிர்மறையின் எதிர்மறையிலும் சரி, ஒரு கருத்தாக்கம் அல்லது ஒரு பொருள் முற்று முழுதாக அழிக்கப்படுவதல்ல. இந்த மாற்றீட்டில், அவற்றிலுள்ள சாராம்சப் பண்புகள் உள்வாங்கப்பட்டு உயர்நிலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. உதாரணமாக, ஒரு விதை முளைவிட்டு துளிர்த்து அதன் சிதைவிலிருந்து ஒரு மரம் வளர்கிறது. அந்த விதையின் சிதைவை எதிர்மறை என்றும், அந்த மரத்திலிருந்து மீண்டும் உற்பத்தியாகும் புதிய விதைகளை எதிர்மறையின் எதிர்மறை என்றும் அவர் விளக்கம் கொடுக்கிறார். விதையானது சிதைவுற்றபோதும் அதிலுள்ள சாராம்சப் பண்புகள் மரமாகி, மீண்டும் விதையாகி தொடர்ச்சியான ஒரு வளர்ச்சிப் போக்கில் கட்டவிழ்ந்து செல்கிறது.

ஹேகலின் இயங்கியல் தர்க்கீகம் மிகவும் சிக்கலானது. கனமானது. கருத்துப் புதிர்கள் நிறைந்தது. தனது இயங்கியல் கோட்பாட்டை நிறுவ மிகவும் பூடகமான வாதங்களை அவர் முன்வைக்கிறார். ஒரு உதாரணத்தை மட்டும் இங்கு பார்ப்போம்.

**கருத்தாக்கம்:**
முழுமையானது பண்புகள் எதுவுமற்ற தூய்மையாக இருக்கிறது.

**முரண் கருத்தாக்கம்:**
பண்புகள் எதுவுமற்ற தூய்மையானது, சூன்யமாக இருக்குமாதலால், முழுமை என்பது இருக்கவே முடியாது.

**கூட்டுக்கருத்தாக்கம்:**
முழுமை என்பது நிலையான பண்புகள் எதுவுமற்றதாக சதா கட்டவிழ்ந்தவாறு உண்டாகிக் கொண்டிருக்கிறது.

இந்தத் தர்க்கீகத்தில், இருத்தல், (Being) இல்லாமை (Non Being) என்ற முரணிய கருத்துக்கள், உண்டாகுதல் (Becoming) என்ற கூட்டுக் கருத்தாக்கத்தில் தீர்வு காணப்பட்டு செழுமை பெறுகிறது என்பது ஹேகலின் வாதம். இவ்வாறு, வாதப் பிரதிவாதங்களை அடுக்கிச் சென்று மிகவும் பூடகமான தர்க்கீக உலகத்தைப் படைக்கிறார் அவர்.

ஹேகலின் இயங்கியல் மனவுலகத்திற்கே முதன்மை கொடுக்கிறது. அவரது தரிசனத்தில் சகலதுமே மனவுலகில் தொடங்குகிறது.

அகத்தின் இயல்புகள்தான் புறத்திலும் இருக்கிறது. மனவுலகத்து இயங்கியல் தான் பொருளுலகத்தையும் இயக்குகிறது. எல்லாமே ஒரே விதியில் அசைகிறது. அகம் வேறு புறம் வேறு அல்ல. அகமே புறம். மனமே இந்த உலகம். மனமே எல்லாவற்றிற்கும் மூலமாக இருக்கிறது. மனதின் இயக்கமாக, அதன் பொருளிய வெளிப்பாடாக மெய்யுலகம் தோற்றப்பாடு கொள்கிறது. இந்த மனமானது மனிதனின் மண்டை ஓட்டிற்குள் மட்டும் செயற்படவில்லை. அதன் பரப்பு எல்லையற்றது. அது அண்டம் வரை விசாலித்து நிற்கிறது. பிரபஞ்ச மனமாக எங்கும் வியாபித்து நிற்கிறது. ஆன்மாவாக, பரமான்மாவாக பிரம்மமாக எல்லாவற்றையும் ஆட்கொண்டு நிற்கிறது.

இயங்கியலின் சக்கரத்தில், அதன் முரணியச் சுழற்சியில் பிரபஞ்ச மனமானது பிரபஞ்சத்தை இயக்கிச் செல்கிறது. தோற்றமும் மாற்றமுமாக சகலதையும் படைத்து, சகலதையும் காத்து, சகலதையும் அழித்து, அந்தச் சிதைவில் சகலதின் உள்ளியல்புகளையும் உள்வாங்கி, உயர்நிலைப் பரிமாண வளர்ச்சியில் பரிபூரணத்துவம் என்ற இலட்சியப் பயணத்தைத் தொடர்கிறது.

பிரபஞ்ச மனமானது பூமியிலும் ஒரு இயங்கியல் காவியத்தை எழுதுகிறது. அதுதான் உலக வரலாறு. மனித வரலாறு. பிரபஞ்சப் பிரக்ஞையின் கணங்களாக, எண்ணப் பொறிகளாக இங்கு யுகங்கள் தோன்றுகின்றன. ஒவ்வொரு யுகத்திலும்ஒவ்வொரு நாகரீகம் தோன்றி மறைகிறது. இந்திய, சீன, கிரேக்க, ரோம, கிறீஸ்தவ நாகரீகங்கள் என்று. இந்த நாகரீகங்கள் ஒவ்வொன்றிலும், அந்த யுகத்துசமூக, அரசியல், பொருண்மிய, கருத்திய கட்டமைப்புகள் அனைத்துமேபிரபஞ்ச மனதில் உதித்த எண்ணப் பொறியின் வெளிப்பாடாகத் தோற்றப்பாடு கொள்கிறது. அந்த எண்ணமானது அந்த நாகரீகத்தில் அதியுன்னத வளர்ச்சியைப் பெறுகிறது. உதாரணமாக, ரோம நாகரீகத்தில் சட்ட (ஆட்சி என்ற எண்ணப்பாடு உன்னத நிலையை அடைந்ததாகக்கூறுகிறார் ஹேகல்) ஒவ்வொரு நாகரீகத்தின் சிதைவிலும், அதன் எதிர்மறை மாற்றீட்டாக, அந்த நாகரீகத்தின் சாராம்சப் பண்பான அந்த எண்ணம் உள்வாங்கப்பட்டு, அடுத்த யுகத்திற்கு, அடுத்த நாகரீகத்திற்கு, அடுத்த வரலாற்றுக் காலகட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த வரலாற்று ஓட்டத்தில் பிரபஞ்சப் பிரக்ஞையானது மானிடத்தின் கூட்டு மனதாகத் தோற்றப்பாடு கொண்டு புதிதுபுதிதாக விழிப்பு நிலை பெற்று வளர்கிறது. முரண்பாடுகளைக் களைந்து, தழைகளை அகற்றி, விடிவை நோக்கி, முழுமையை நோக்கி முன்னேறிச் செல்கிறது.

இவ்வாறு பிரபஞ்சமனம் இயங்கியல் சக்கரத்தில் சுழன்று, மனித வரலாற்றை நகர்த்துகிறது.

ஹேகலின் தத்துவார்த்த எழுத்துகளை ஆன்மீகவாதம் என்றும், புதிரான புராணக்கதை என்றும் கடுமையாக விமர்சித்த கார்ல் மாக்ஸ் அவரது இயங்கியல் கோட்பாட்டை மெச்சத் தவறவில்லை. 'இயக்கத்தின் இரகசியத்தை முதன்முதலாக ஆழமாக விளக்கிய பெருமை ஹேகலைச் சாரும்' எனப்பாராட்டினார். எனினும், ஹேகலின் இயங்கியல் இறையியலில் புதைந்து கிடக்கிறது; பிரபஞ்சம் எங்கும் வியாபித்து நிற்கிறது; ஆகாயத்தில் தலை கீழாகத் தொங்கும் அதனை, பூமிக்குக் கொண்டு வந்து நிலத்தில் காலூன்றச் செய்ய வேண்டும், எனக்குறிப்பிட்டார் மாக்ஸ். ஹேகலின் இயங்கியல்எண்ண விதை பூடகமாகஆன்மீக மேலுறையால் போர்த்தப்பட்டிருக்கிறது. இந்த மேலுறையைக்கழற்றி எறிந்து விட்டு விதையை மட்டும் எடுக்க வேண்டும், என்று இன்னொரு இடத்தில் கூறுகிறார்.

ஹேகலின்கருத்துலகிலிருந்து இயங்கியலைப் பிரித்தெடுக்கும் அறுவைச் சிகிச்சையை மார்க்சீயம் நுட்பமாகச் செய்திருக்கிறது. இந்த அறுவைச் சிகிச்சை மூலம் பிரபஞ்ச யாத்திரையில் சென்ற இயங்கியல் பூமிக்கு கொண்டு வரப்படுகிறது. சமூக எதார்த்த நிலத்தில் நிறுத்தப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## செங்கை ஆழியானின்

# 'யாழ்ப்பாணத்து இராத்திரிகள்' ஒரு நோக்கு!

இங்கே சொல்லப்படுபவை தனியொருவனின் பார்வையில் விழுந்த பதிவுகளே. ஒவ்வொருவரின் அறிவிற்கு தகுந்த மாதிரியும் அவதானிப்பிற்கு தகுந்த மாதிரியும் கருத்துக்கள் வித்தியாசப்படலாம், படும்.

இது தான் சரியென இங்கு சொல்ல வரவில்லை, அல்லது இதுதான் வேதம் என்று சொல்ல முயற்சிக்கவில்லை.

நூலை அவதானிக்கும் போது நெஞ்சில் பதிவாகும் எண்ணங்களை இங்கு பரப்பி வைப்பது உயர்ந்ததாகப் படுகிறது. உன்னதமாகவும் இருக்கிறது.

சொல்லப்படுபவை யாவும் பார்வையில் பட்டவை மட்டுமே.

'ஒரு நூல் ஒருவருக்கு மிகச் சிறந்த படைப்பாகத் தோன்றலாம். அதே நூல்இன்னொருவருக்கு சாதாரணமாகத் தோன்றக் கூடும் இது அவரவர் பார்வையை பொறுத்த அளவில் சரியானதே என விமர்சகரும் மொழிபெயர்ப்பாளருமான சரஸ்வதி ராம்நாத் குறிப்பிட்டிருக்கின்றார்.

நூலுக்கு அதைப்பற்றிய கருத்துக்கள், அபிப்பிராயங்கள் நிறைய தேவைப்படுகின்றன. புத்தகத்தில் பேசப்படுபவையுடன் அதைப்பற்றியும் நிறையப் பேசப்பட வேண்டும். இது ஆக்க இலக்கிய வளர்ச்சிக்கு உதவும் எனக் கூறலாம்

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் என்று சொல்லப்படுகின்ற செங்கை ஆழியானின் 'யாழ்ப்பாணத்து இராத்திரிகள்' என்ற சிறுகதை தொகுப்பை அவதானிக்க நேர்ந்தது.

182 பக்கங்கள் கொண்ட இந்த நூலில் 23 கதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. 1970 ஆம் ஆண்டு வெளியான ''கங்கு மட்டை'' என்ற கதையிலிருந்து 1993ல் வெளியான 'யாழ்ப்பாணத்து இராத்திரிகள்' என்ற கதைவரை இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

சிறகுகள் ஏற்றப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டிகளை, நிறுத்தி விட்டு இளைப் பாறும் தொழிலாளிகளைக் கொண்ட படம் அட்டையில் பதியப்பட்டுள்ளது இது இப் புத்தகத்திற்கு அழகு சேர்ப்பதுடன் இந்த மண்ணின் அவலத்தையும் குறிப்பிடுவதாக உள்ளது

சில நல்ல கதைகளைக் கொண்டுள்ள இந்நூல், கோட்டுத்தாளில் (அப்பியாசக் கொப்பிக் காகிதத்தில்) பதிப்பிக்கப்பட்டுள்ளது இதுவும் இன்றைய அவலத்தை சொல்லக் கூடியதாக அமைந்துள்ளது,

> யதார்த்தத்திலிருந்து இலக்கியம் மாறுபடும் போது எமது பதிவுகள் வெறும் கற்பனையானதாக - வாழ்வுடன் தொடர்பற்றதாக கருதப்படும்.

அஃதாவது அட்டைப்படமும், அப்பியாசக் கொப்பி காகிதமும் இன்றைய காலத்தைச் சொல்லும் பதிவுகளாக அமைந்துள்ளன எனச் சொன்னால் மிகையில்லை

உள்ளடங்கும் கதைகளில் பெரிதாக இன்றைய காலம் பதிவு செய்யப்படவில்லை என்று கூறலாம்.

இந்த மண்ணின் மாற்றங்கள், மனிதர்களின் தாகங்கள், எதிரிமீதான ஆவேசங்கள், எதிரியின் கொடூரங்கள் எவையுமே இங்கு பெரிதாக-குறிப்பிடப்படும் அளவிற்கு சொல்லப்படவில்லை எனலாம்.

செங்கை ஆழியானின் கதைகள் ஒவ்வொன்றிலும் அவருக்கே உரிய எளிய நடை அழகாக இருக்கின்றது. கதையின் கரு, சொல்லப்படும் நேர்த்தி, உத்தி யாவுமே சிறப்பாக அமைகின்றன.

'உப்பங்கழி' என்றகதையை நோக்கினால் கிராமமக்களை ஏமாற்றி வாழும் சிலரது செய்கைகளும் ஏமாந்து போகும் மக்களின் இயலாமையும் வெளிப் படுத்தப் பட்டிருக்கின்றன.

'அறுகு வெளி' என்ற கதையில் ஒப்பந்தக்காரர் ஒருவரின் போலியான வேலைப்பாடால் ஒரு கிராமமே அழிவது சித்தரிக்கப்படுகிறது.

'திசாநாயகாவும் கந்தசாமியும்' என்ற கதையில் தமிழனின் சுயநல மனப்பாங்கை சொல்ல முனைந்திருக்கின்றார் ஆசிரியர்.

சரி! சில கதைகளை மட்டும் விரிவாக நோக்குவோம்.

'வல்லூறுகள்' என்ற கதையை இங்கு குறிப்பிடாக வேண்டும். வலிமையானவர்கள் எந்தளவிற்கு வலிமையற்றவர்கள் மீது ஏறி மிதிக்கின்றார்கள் என்பது பற்றியும் ஏழையானவர்களை எந்தளவிற்கு சுரண்டுகின்றார்கள். என்பது பற்றியும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

வன்னிப்பகுதி ஒன்றில் இக்கதை இடம்பெறுவதாக ஆசிரியர் காட்டியுள்ளார் அந்த மண்ணிற்குரிய நயம், இக் கதையில் வெளிப்படுகின்றது.

'இயற்கையின்ரை அற்புதத்தை ஆர்தான் அறிவர் சண்முகம் இந்தத் தாமரை இலையைப் பார் மழை கொஞ்சம் பெய்து குளங்களிலை தண்ணி தேங்கினதும் கிசுகிசுவென வளரத் தொடங்கிவிடும். குளத்தில் நீரும் முட்டி வழிய தாமரை இலையளும் சும்மா நீரை வெளியிலை தெரிய விடாது. அப்படியே பாசி படர்ந்ததைப்போல குளத்தை மூடிவிடும். இது தான் அற்புதம் கண்டியோ......? மழை பெய்து முடிந்து சும்மா வெயில் கொளுத்தேக்கை குளத்திலை இருக்கிற நீரில வெயில்படாது, நீரும் வத்தாது,

இவ்வாறு ஒரு உரையாடல் அக்கதையில் இடம்பெறுகிறது. இது வன்னியின் புவியியல் சூழலை புலப்படுத்துகிறது.

இந்த நூலில் இதுபோன்ற பலவற்றை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட கதையில், உயர் அதிகாரியிடம் காட்டி, காணி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக வேறோர் இடத்திலுள்ள பெரிய பெரிய தென்னை மரங்களை வேரோடு பிடுங்கி வந்து நட்டு பழைய காணி என்று காட்சிப்படுத்த முனைவதாகச் சொல்லப்படுகின்றது. இது சினிமா பாணியிலான முடிவு என்றே சொல்லலாம். இது சாத்தியமா என்பது கேள்விக்குரியதே.

'முதலிப்பழம்' என்ற கதையில் ஆசிரியர் சொன்னதைவிட, சொல்லாமல் விட்டது ஏராளம் என்று கூறலாம். மிக எளிமையாகபெரியதொரு விஷயம் கூறப்பட்டுள்ளது சிறந்த கதையாக இதைச் சொல்லாம்.

கரடிகளை துரத்த முடியாதவன், குரங்குகளைத் துரத்த மறுக்கின்றான். பலவீனமான ஜீவன் மீது தன் பலத்தை காண்பிக்க அவன் விரும்பவில்லை

அழகாக ... மனசில் கவிதையாக வியாபிக்கும் கதை இது 'அறுவடை' என்ற கதையில் ஓர் ஏழை விவசாயியின் வேதனை சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் அந்த விவசாயியின் இயலாமை வெளிப்படுத்தப்படுகின்றது.

'ஷெல்லும் ஏழு இஞ்சிச் சன்னங்களும்' என்ற கதை ஓரளவிற்கு இன்றைய யதார்த்தத்தைச் சொல்ல முனைந்துள்ளது.

'மற்றும் மண்ணில் சரியும் விழுமியங்கள், விடியவில்லை, 'பிச்சைக்காரர் ஆக்கவேண்டாம், ஆகிய கதைகள் சிறந்ததாகக் கொள்ளலாம்

இத்தொகுப்பின் பெயரை உடையதும் இறுதிக் கதையுமான 'யாழ்ப்பாணத்து இராத்திரிகள் பற்றி சற்று நோக்கின்.

மிகத் தெளிவான நடையில் சொல்லப்பட்டுள்ள இக் கதையில் பொறுப்பற்று வெளி நாடுகளில் வழும் இன்றைய இளைஞர்களின் நிலையை எழுத்தாளர் சித்தரித்துள்ளார். இத்துடன் கொழும்பு-யாழ்-பயணம் பற்றிய அனுபவங்களும் பதிவாகியுள்ளன

'சூட்கேசில் இருக்கின்ற ட்ரான்சிஸ்ரர், கசெற்றுகள் சேலைகள். சில்லறை அலங்காரச் சாமான்களைக் கொடுத்தால் சகோதரர்கள் சமாதானமாகி விடுவார்கள் என்று ஆசிரியரின் எண்ண ஓட்டம் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த 'ட்ரான்சிஸ்ரர், கசெற்றுகள்' எடுத்து வந்திருப்பதாக கூறப்பட்டிருப்பது நடைமுறை யதார்த்தத்திலிருந்து மாறுபடுகின்றது.

வெளிநாட்டிலிருந்து வந்தவரின் 'சூட்கேசை' இராணுவம் சோதனை செய்யாததைப் போலவும் சோதனை செய்திருப்பினும் இப்பொருள்களை வடக்கிற்கு எடுத்துச் செல்ல அனுமதித்திருக்கின்றது போலவும் ஒரு தடுமாற்றத்தை ஆசிரியர் ஏற்படுத்துகின்றார்.

யதார்த்தத்திலிருந்து இலக்கியம் மாறுபடும் போது, எமது பதிவுகள் வெறும் கற்பனையானதாக வாழ்வுடன் தொடர்பற்றதாக கருதப்படும் இதை குறையாகக் கொள்ளவேண்டும்.

சில சிறப்பான கதைகளை உள்ளடக்கி வெளிவந்துள்ள இந்த நூலில் வாசகர்கள் எதிர்பார்த்ததைவிட, இன்றைய வாழ்வியலிருந்து அந்நியப்பட்டுப்போன பல சங்கதிகள் பெருமளவில் சொல்லப் பட்டிருக்கின்றமை இந்த நூலின் குறையாகத்தான் சொல்ல வேண்டும் ஆயினும் அவை ஒரு காலத்தின் பதிவு எனச் சமாதானம் சொல்லி திருப்தியடையலாம்.

செங்கை ஆழியான் என்கிற ஆக்க இலக்கிய கலைஞரின் கைவண்ணத்தில் பல படைப்புகள் வெளிவந்துள்ளன.

மிக எளிமையான கதை சொல்லும் அவரது பாணி, பாமரர்கள் மத்தியில் அவருக்கென நாற்காலி தயாரித்துக் கொடுத்திருக்கிறது தமது வாழ்வின் அனுபவங்களை ஜனரஞ்சமாக சொல்ல விழையும் இந்த கலைஞர் பெரும்பாலான கதைகளில் இந்த மண்ணின் சமகால நிகழ்வுகளைச் சொல்ல மறந்து விடுகின்றார்:

''செங்கைஆழியானைநான் வினைத்திறன் மிக்க கலைஞனாகவே கணிக்கின்றேன்'' என்று நூலின் முன்னுரையில் ஏ ஜே கனகரத்தினா குறிப்பிட்டிருப்பது பொருத்தப்பாடானதெனக் கூறலாம்.

''சமூகத்திற்கு பயன் தரும் என்று நான் நம்புகின்றவற்றை, எனக்குத் தெரிந்தவற்றை சலிக்காமல் பிறருக்கு எடுத்துக் கூறவிழையும் அவாவின் உந்துதலே என் ஆக்கங்கள்'' என நூலாசிரியர் 'என்னுரையில்' தெரிவித்திருப்பது நோக்கத்தக்கது

இந்த மண்ணில் எழுத மறந்த 'எழுத்தாளர்கள்' ஏராளம் உண்டு இவர்கள் த்தியில் நீண்ட தொடர்ச்சியான காலம் இலக்கிய படைப்பில் ஈடுபட்டுள்ள செங்கை ஆழியானின் பணி வரவேற்கத் தக்கது தான்.

**வவுனியா - திலீபன்**

---

## மனிதனும்

ஹேகலின் ஆன்மீகத்தை மார்க்சீயம் விரட்டியது. ஆயினும் ஹேகலின் 'ஆவியை' மார்க்சீயத்தால் விரட்ட முடியவில்லை. அது மறை பொருளாக, எதிர்மறையின் சாகாத பண்பாக மார்க்சீயத்தில் புரையோடிக் கிடக்கிறது.

மார்க்சீயத்தின் பிதாமகர்களான மாக்ஸ், ஏங்கல்ஸ் தொடக்கம், மார்க்சீயப் புரட்சிவாதிகளான லெனின், மாவோ, மற்றும் பல நவ-மார்க்சீய தத்துவ அறிஞர்கள் வரை ஹேகலின் இயங்கியல் தத்துவம் பலரால் பல்வேறு ரகங்களில், பல்வேறு வடிவங்களில் உள்வாங்கப்பட்டிருக்கிறது.

மார்க்ஸின் தோழரான ஏங்கல்ஸ் இயங்கியல் தத்துவத்தின் அடிப்படையில் இயற்கையின் இரகசியங்களை விளக்க முனைந்தார். இயற்கையின் இயங்கியல் (Dialectics of Nature) என்ற தலைப்பில் அவர் எழுதிய நூல் இயங்கியல் விதிகளை விஞ்ஞான விதிகளாக நிறுவ முனைகிறது. உயிருலகமும் பௌதீக உலகமும் இயங்கியலால் இயக்கப்படுவதாக அவர் தரும் பல உதாரணங்களை இன்றைய விஞ்ஞானம் ஏற்க மறுக்கிறது. அன்றைய காலகட்டத்தில், அவர் இயங்கியலின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தி எழுதினார் என்பதை இன்று பலர் ஒப்புக்கொள்கிறார்கள்.

இயங்கியலின் அடிப்படையில் ஆன்மீகத்தின் சூட்சுமத்தை விளக்க முனைந்தார் ஹேகல். அதே இயங்கியல் விதிகளைக் கொண்டு இயற்கையின் இரகசியங்களை விளக்க முனைந்தார் ஏங்கல்ஸ். அதேவிதிகளைக் கொண்டு சமூக வரலாற்று இயக்கத்தை விளக்க முனைந்தார் மாக்ஸ்.

ஹேகலின் இயங்கியலுக்கும், மார்க்சீய இயங்கியலுக்கும் மத்தியில் அடிப்படையான வேறுபாடு உண்டு என வாதிப்பவர்களும் உளர். ஹேகலின் இயங்கியல் கருத்து நிலை சார்ந்தது; அகவயமானது; அது நிஜவுலகத்தின் நிழலான மனவுலகத்தை ஆராய்கிறது. ஆனால் மார்க்சீய இயங்கியல் பொருளியம் சார்ந்தது; நிஜவுலகத்தின் மெய்யுண்மைகளை விளக்க முயல்கிறது என்பது இவர்களது வாதம். இவ்விதம் மார்க்சீய இயங்கியலை வேறுபடுத்தி அதனை பொருளிய இயங்கியல் (Materialistic Dialectics) என இவர்கள் வர்ணிக்கிறார்கள். இந்த வேறுபாட்டில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆயினும் இந்த வேறுபாடு ஆய்வுப் பொருள் சார்ந்தது; ஆய்வுமுறைமை சார்ந்தது. ஆனால்,இயங்கியலின் மூல விதிகளில் அடிப்படையான மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இந்த மூல விதிகளை நெறித்தவர் ஹேகல். இது அபாரமான கண்டுபிடிப்பு என மார்க்சீயத்தின் தந்தைகளே மெச்சியிருக்கிறார்கள். இந்த மூல விதிகளை மாக்சீயம் உள்வாங்கி, அதன் அடிப்படையில் ஆழமான சமூக ஆய்வுகளையும், நடைமுறைப் பரிசோதனைகளையும் செய்திருக்கிறது. இன்னொரு விதத்தில் சொல்லப் போனால், ஹேகலின் இயங்கியல் விதிகளை மார்க்சீயம் உள்வாங்கி அவற்றைச் சீரமைத்து, செழுமைப்படுத்தி, சிறப்பான ஆய்வுக்கருவியாக கையாண்டிருக்கிறது எனலாம்.

(நன்றி: வெளிச்சம்) (தொடரும்)

## மீண்டும்

இவ்வாறாக மறைந்திருந்த முன்னைய பகைமை உணர்வுகள் வெளிவர ஏம்சின் விவகாரம் வழிவகுத்து விட்டதுதெளிவானதொருநிலைப்பாட்டின் அடிப்படையிலோ அல்லது தாயகப்பற்றின் அடிப்படையிலோ செய்யாதவிடத்து ஒற்றாடல் துறை என்னவாகும் என்பதற்கும் ஏம்சின் விவகாரம் ஒருசான்றாகி விட்டது பணத்தால் மற்றவர்களை விலைக்குவாங்கும் போது நம்மவர்களும்அவ்வாறே வாங்கப்பட்டனர் என்பதே அமெரிக்காபடித்த பாடமாகிவிட்டது என்னதான் பட்டறிவு ஏற்பட்டாலும் எந்தக் காலகட்டத்திலும் புலனாய்வுத் துறையின் இன்றியமையாமை என்பது குறைத்து மதிப்பிடப்பட முடியாதது என்பதே கெடுபிடிப்போருக்கு பின்னாலான காலகட்டம் உணர்த்தும் செய்தியாகும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# சிறுகதை

# நிமிர்வு

## ந. கிருஷ்ணசிங்கம்

ஊரடங்கு உத்தரவு விலக்கப்பட்டதால், செங்கலடிப்பிரதேசம் வழமை நிலைமைக்கு வந்து கொண்டிருந்தது. தொடர் சூட்டுச் சத்தங்களும், செல் சென்று சிதறும் ஒலிகளும், விமானம் வீசும் குண்டொலிகளும், இராணுவத் தொடர் ஊர்திகளின் தெரு இரைச்சல்களும் ஓய்ந்து, மையங் கொண்டிருந்த மாபயம் சற்று மறைந்தது; இருள்த் திரையைக் கிழித்து ஆங்காங்கே வீட்டு விளக்குகள் விழிதிறந்து பார்த்தன.

பிள்ளைகளின் பாடு என்ன? தந்தையின் நிலை என்ன? சகோதரங்களின் கதி என்ன? என்று ,,, உறவு சொல்லி; ஊதி வெளிவந்த பெருமூச்சுகளோடு, பேதலித்துக் கிடந்தவர்கள் ,, இடிந்தும் - தீயில் எரிந்தும் ,,. அழிந்துபோன வீடுளை துறந்து ஏதிலிகள் தங்ககங்கள் தேடி வந்தவர்கள், அனைத்துத் தரப்பினரும், விடியல் ஒன்றை வேண்டித் தவங்கிடந்தனர்.

பசியால் பேச்சை இழந்து ஒட்டிய வயிற்றுக்குகையைச் சுமந்தபடி, பாய்களில்வெறும் தரையில் சுருண்டு கிடந்தவர்கள்; கரிலை விடியல் கண்டு கண்திறந்து பார்த்தனர் செல்ல மேனிகளை மேலெழுப்பி நடுங்கியபடி நெஞ்சை நிமிர்த்தி நாரிகளை கைகளால் பிடித்தபடி நடந்து வீட்டுட்படலைகளின் இறுக்கமான கட்டுக்களை அவிழ்த்து வீதிக்கு வெளிப்பட்டு; விழியுயர்த்தி; அச்சங்கலந்த பார்வையை அகலவீசினர்.

கடைத்தெருவில் மனித நடமாட்டம் மெல்லப் பெருகுகின்றது. அரைக்கதவில் சில கடைகள் திறந்து கிடக்க, அவற்றை மனிதத்திரைகள் மறைத்துக் கொள்கின்றன. கொள்ளை விலை கூறி: குதித்தாடும் தராசுகளை நிறுத்தாது நிறுத்துக் கொட்டியபடி மும்முரமாய் வியாபாரம் நடத்தும் "மூனா" க்களுள் முத்துலிங்கமும் ஒருவராகி மின் கதியில் செயற்படுகின்றார்.

"ஏ! என்னத்துக்கு இப்படிக்கத்றா? உயிரம்பொயித்து? இல்லறை இல்ல இந்தா பிடி இனிப்பு; ஏ! மற்றான் வாவன்டா! சொல்லித் தொலையண்டா! .. மறுகா இவன் எங்க கிறுகிறான்? பொயித் தள்ளிநில்! விலை கேட்டாடி வாங்கப்போறா? வேணுமெண்டா வாங்கு! இல்லாட்டி வெட்டைக்குப் போ! என்ன சொல்லித்துப் போறாள்? பல்லு உடைச்சு கையில தருவன் ஓ! ... ,,

என்றெல்லாம் ஏறுமாறய்ப் பேசிய ... முத்துலிங்கம் முதலாளி மும்முரமாய் வியாபாரம் நடத்துகின்றார் காசை எண்ணித்தள்ளி... கேட்ட பொருளை எடுத்தெறிந்து கிராக்கியான நடைமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு... கேட்பாரற்ற தனிக் காட்டு ராசாவாக, தன்னை அவர் காட்டிக் கொள்ளுகின்றார்.

பகற் பொழுது கழிய... இரவு நெருங்கி வந்து சுரண்டியது; இதயத் துடிப்புக்கள் காதுகளில் கேட்டன எண்ண வெளியில் நினைவுக் கழுகுகள் நிரைநிரையாகப் பறந்து வந்து பயங்காட்டின நெஞ்சக்குமுறலை அடக்க... நெடுமூச்செறிந்து புரண்டு படுத்தவர்கள்; தூரத்தே விழுந்து வெடிக்கும் எறிகணைகளின் அதிர்வு கேட்டு உழன்றனர்.

"செங்கலடிக் கேம்பில் இருந்துதான் ஆமி அடிக்கிறான்கள்?" என்று பூபாலும் கிழவர் சுருட்டின் புகையை வெளியே தள்ளி... வீணியை தூரத்துப்புகின்றார்! சிறிய அந்த அறையில் படுத்துக்கிடந்த மனைவி சின்னம்மாவையும்... மகள் சுந்தரியையும் எட்டிப்பார்த்து விட்டு யன்னலண்டை சற்றுத் தாமதித்து; நெடுமூச்சை இறைத்தவராக தனது குந்துப்பாயில் வந்து குந்துகிறார் கிழவர்.

முற்றத்தில் கிடந்த குட்டைநாயின் குலையல் சப்தத்தை அடுத்து. ஆளரவம் கேட்கவே ... அதிர்ந்த குரலில் "ஆர்... ஆர் அது?" என்ற பூபாலரின் கேள்விக்கு, "அது நான்! சோமு!" என்ற பதில் அங்கு பிறக்கின்றது.

குப்பி விளக்கைக் கொழுத்திப் பிடித்தவர் மருமகன் சோமனை அடையாளம் கண்டு ஆனந்தப்பட: இந்த அமளியில் சின்னம்மாவும் சுந்தரியும் எழுந்து கொள்கின்றார்கள். பயமயக்கம் தெளிந்து. வீடு வீரமாய் நிமிர்கின்றது!

கணவனின் வரவு கண்டு களிப்போடு சுந்தரி அவனருகில் வந்து நிற்கின்றாள். பாளை பிளந்தது போன்ற பல்வரிசைச் சிரிப்பு, குப்பி விளக்கொளியிலும் தெளிவாகத் தெரிந்தது: "என்னப்பா; எங்கால வந்தியள்?... கொள்ளை விழுந்த ஆமியள் என் நேரமும் சிறுசிறுத் திருக்காங்கள்!... சித்தாண்டி முருகன் தான் இந்த நேரத்திலை காப்பாத்தி விட்டிருக்கார்!" என்றவள், கணவன் கொண்டு வந்த கைப்பையைப் பெற்றுச் சென்று பக்குவமாய் நெல் மூட்டைகளின் மறைவில் வைக்கிறாள், சுந்தரி! என்ன நல்லாய் பயந்துபோய் இருக்காய் போல வெலங்குது" என்ற சோமு இருளின் துணையோடு துணைவியின் கரத்தை இறுகப் பற்றிக்கொண்டான் அவனின் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டவள் குப்பி விளக்கோடு குசினிப்பக்கமாகசென்றாள்.

மறுகணம்தண்ணீர் பிழிந்த பழஞ்சோற்றை கறிவகைகளோடு பிசைந்து குழையலாக்கி ... தட்டு நிறைய இட்டபடி வந்து, அன்போடு அவன் முன் வைக்கின்றாள் நிசப்தமான அந்த நள்ளிரவில் ... குட்டை நாய் வந்து வாலை ஆட்டி, அனுங்க ... உருட்டிய சோற்றின் ஒரு பகுதியை அதற்கும் பகிர்ந்து தானும் உண்டு அவன் பசியாறி எழுந்தான்! கை வாய் கழுவி — சரத்தால் துடைத்து செம்புத்தண்ணீரைச் செப்பமாகக் குடித்து விட்டு. "அப்பாடா—" என்று குந்திலே வந்து அமர்ந்து கொண்ட சோமனுக்கு, காதிலே விழும்படியாக— சின்னம்மா கதையைத் தொடங்கினாள்.

"எட! இந்த நாலஞ்சு நாளும் எம்மாத்திரம் பயமுறுத்தாட்டி— மேலாலையும் கீலாலையும் கொண்டந்து பொரிஞ்சல்லா போட்டானுகள் பிசாசுகள்! சித்தாண்டியானே! படுக்க உடன்— இருக்க உடன் எண்டு, அழிவானுகள் என்னபாடு படுத்தினானுகள்! உசிருகளை உட்டதுகள் ... ஊனமா போனதுகள் எண்டு—" தொடர் சுருதியில் வெளிவந்த மாமியாரின் பேச்சைக் கேட்டு சோமன் "உம் — உம்—" இட்டபடி, குசியாகக் காலரட்டிக் கொண்டிருந்தான்.

"மருமகன் நம்மளை பாப்பார் எண்டு, நாமள் நெனைச்சித்து இரிக்க, ஆமிக்கிளைக்கை நம்மளை உட்டுட்டு— துணைப்படை— அது இதென்டிட்டு குண்டுகளையும் தூக்கித்து— வெட்டையிலை நிக்கிறியள்—" என்று பூபாலுக் கிழவர் புறுபுறுத்தார்.

"மாமியும் மாமாவும் நெனைக்கிற சரிதான். ஆனா... நம்மட பொடியனுகளுக்கு எல்லாரும் ஒத்தாசையாதான் இருக்கோணும்! நான் மட்டுமில்ல: நாம எல்லாரும் குண்டைத்தூக்கிப் பிடிச்சுத்தான் வெட்டையிலை வரோணும் .. இல்ல இந்தமண்ணில தமிழீழம் வரா... ஓ!, சுந்தரி! அந்த வெத்தில வட்டாவ எடுத்து வா!... வாய் புளிக்குது!".

சோமன் கதையை முடிவுக்குச் கொண்டுவந்து; வெற்றிலை போட்டு சப்பிக்குதப்பி — துப்பிவிட்டு, உற்சாகமாய் தனக்குரிய படுக்கையில் துணையோடு துயில் கொண்டான்.

அதிகாலை அமைதியாக விடிந்தது. ஊர்நிலைமை வழமைகு வந்தது போன்ற பொய்யான தோற்றப் பொலிவு கண்டு, பலரும் வயல்களை நாடி வேளாண்மை வெட்ட வெளிப்பட்டுப் போனரர்கள்,

பருவம் தப்பியதால் படுத்துவிட்ட நெற்பயிரை கரங்கள் கொடுத்து நிமிர்த்தி... கரிசனையோடு வெட்டிக் குவித்தார்கள்: படபடப்போடு பல திக்கும் பார்த்து...... சந்தேகத்தைத் தீர்த்து; தூரத்தில் கேட்கும் சூடால் தீங்குகள் வரா என்று துணிந்து... பம்பர விசையுடன் அரிவு வெட்டு ஆங்காங்கு நடைபெற்றன.

ரைக்டர் யந்திரங்கள் எண்ணையற்றுப் படுத்ததால்... மாடுகளால் சூடுழக்கி...... தூற்றி எடுத்த நெல் மணிகளை வயல் முற்றத்தில் குளிக்கும் வேலையும் அன்று முழுவதும் தொடர்ந்தது. எரியுண்டு அழிந்துபோன வயல்களைவிட.... அனேகமாக எங்கும் மனிதத்தலைகள் தென்பட்டன.

பூபாலுக் கிழவரும், சின்னம்மாவும் வயலில் தங்கி, முழுநாளும் நின்றார்கள். சோமன் ஏதோ அவசரவேலையாய் வெளியே சென்றுவிட, சுந்தரி மட்டும் வீட்டில் தங்கி இருந்தாள்.

முற்றத்தில் கிடந்த நாய் எழுந்து நின்று ஆவேசமாய் குரைத்து; அங்குமிங்கும் ஓடவே ... அரவம் கேட்டு எட்டிப்பார்த்த சுந்தரி அதிர்ந்தே போனாள்!

கடைக்கார முத்துலிங்கம் முன்னே வந்து வழிகாட்ட. இராணுவமும்... துரோகக்கும்பலும் ஒழுங்கையைத் தாண்டி வந்து வீட்டின் முற்றத்தில் குவிந்து கொள்ளவே; திகில் கொண்டு திணறிய சுந்தரி: முன்விறாந்தை மூலையில் அடுககப்பட்டிருந்த நெல்லு மூட்டைகளின் பின் சென்று, ஒதுங்கி உருமறைப்புச் செய்து கொண்டாள்.

கொலை வெறிகொண்ட கூட்டத்தினால் தான் குதறப்படப் போவதை எண்ணி, பதை பதைத்தவளின் உடல் நடுங்கி வேர்த்தது! மறுகணம் துணிவு கொண்டு பெண்புலியாக அவள் செயற்பட்டாள்.

அங்கு கிடந்த பையினுள் கைவிட்டு... குண்டொன்றை எடுத்துக் கொண்டவள், மின்னல் வேகத்தில் அதைச் செயற்படுத்தி... முற்றத்தை நோக்கி வீசினாள். மறுபடி ஓர் குண்டு! ... மீண்டும் மறு குண்டு... தொடர் இடிமுழக்கம் போல் அங்கு அதிர்வோசைகள் எழுந்து அடங்கின!!!

சோமனின் வரவை மோப்பம் பிடித்து; அவனைப் பிடித்து அடித்து முறித்து...... வெட்டிச்சுட்டு வேதனைப் படுத்தி, குதறிக்கொல்ல குவிந்துவந்தகொலைவெறியர் சிலர்அங்கு உடல் சிதறிக் கிடந்தனர்.

வேட்டை ஒன்றை வெகு விரைவில் முடித்து, வெளிப்பட்டுவந்த பெண்புலி போன்ற சுந்தரி, கோதியடங்கிய கூர்மையான பார்வையை அங்கு படர விட்ட போது; முற்றத்தை முற்றுகையிட்டு நின்ற மூர்க்கர்களை அவளால் காணமுடியவில்லை

வெண்மணல் பூத்த முற்றம் செந்நிறமாகிச்சிவந்துகிடந்தது! சிதறிக் கிடந்த தசைக் குவியலுக்கிடையே, , முதலாளி. முத்துலிங்கத்தின் முகம் மட்டும் முழுமையாக தெரிந்தது.

காட்டிக் கொடுக்கும் அந்தக் கயவனின் கரியமுகத்தின் மேல் காறி உமிழ்ந்தாள் அவள்.

---

## இந்தத் தேசத்தின் விடிவுக்காய்...

இனவாத அரசின் ஆயுதமுனைக்கு சுயத்தை இழந்து-
இறப்பின் விளிம்பில் நிச்சயமற்ற என் இருப்பு
மரணத்தை எப்போதும் மடிமீது சுமந்தபடி
நாட்களின் நகர்வு.
உயிரிழத்தலின் கொடூரம் எண்ணங்களெல்லாம்
வியாபித்து அச்சமுட்ட-
பணிந்து போதல் மற்றும் அடிதொழுது வாழ்தலிலேயே
விருப்பு.
மரணம் ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட ஒன்றானாலும்
வாழ்தல் மீதான பிரியம். சுயத்தை வலியுறுத்தலில்-
இறப்பை எதிர்கொள்ள மறுதலிக்கிறது - ஆனால்
இந்த மண்ணின் இரத்தம் தோய்ந்த நிகழ்வுகள்
இறப்பின் மீதான என்பயத்தைப் பரிகசிக்கிறது;
வரையறுக்கப்பட்ட காற்றை -
திணறலோடு சுவாசிக்கச் சபிக்கப்பட்ட எமக்கு
இரத்த வெடில் நிறைந்த காற்றானாலும்
திணறலில்லாமல் நாம் சுவாசிப்பதற்காய்
நித்தம் மூச்சிழந்து போகும் பிஞ்சு முகங்களது
இறப்பின் முனைகள் என்நெஞ்சைக் குதறுகின்றன.
இருள்சூழ்ந்த எம் இருப்பின்மீது வெளிச்ச விழுதிறக்க
சிறைப்படுத்தப்பட்ட சூரியனைத் தேடுதலில்
நித்தம் குருதி குளித்துக் கருகிவிழும்
இளங்குருத்துக்களின் ஈக இறப்புக்கள்
என் இதயத்தின் மீது சம்மட்டி கொண்டு இடிக்கின்றன.
பேச்சிழத்தலை மறுத்து மூச்சிழந்தவர் முன்
சுயமிழந்த வாழ்தலை நேசித்த எனையெண்ணி
விழித்துக் கொண்ட என்னுடைய 'நான்' வெட்கித் தலை
குனிகிறது
இறப்புப் பற்றிய என் பயங்கள் இறந்து விழுகின்றன-
மரணத்தை எதிர்கொள்ளும் நெஞ்சுரத்தோடு
என் சுயத்தை வலியுறுத்த இருப்பை நிச்சயப்படுத்த
குருதி தோய்ந்த சுவடுகள் வழியே
விடியலின் இலக்கு நோக்கி நானும் நடக்கிறேன்;
இந்தத் தேசத்தின் விடிவுக்காய்...

- உமாஜிப்ரான்

---


## கலை வர்த்தக கல்லூரி

**C. C. A**

வெலிங்டன் சந்திக்கு அருகாமை
யாழ்ப்பாணம்.

**கலை, வர்த்தகம்**

**G. C E. A/L 96**

**புதிய பிரிவு**

**ஆரம்பம்: 30.04.94 சனிக்கிழமை**
**காலை 8.00 மணி**

**பிரபல ஆசிரியர் குழு**

| | |
|---|---|
| பொருளியல் - | திரு. உதயன் |
| கணக்கியல் - | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் - | திரு. இரட்ணம் |
| அளவையியல் - | திரு. சயந்தன் |
| இந்துநாகரிகம் — இந்துசமயம் — | திரு: ஜோதீஸ்வரன் |
| புவியியல் - | திரு. வேலா |
| தமிழ் - | திரு: தங்கராஜா |
| அரசியல் - | திரு: பஞ்சு |
| கிறீஸ்தவநாகரிகம் - | திரு. நோபேட் |

குறிப்பு:
1. மாணவர்கள் முற்கூட்டியே பதிவுசெய்து அனுமதியை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்
2. பல்கலைக்கழக பட்டப்படிப்பை மேற்கொண்ட ஆசிரியர்களின் இணைந்தசேவையை வழங்கும் ஒரே நிறுவனம்;
3: பரீட்சை நுட்பங்களை அறிந்த ஆசிரியர்கள் இணைந்து கற்பிப்பதுடன் மாதாந்தப் பரீட்சையும் நடாத்தப்படுகின்றது
4. கலை வர்த்தகத்தில் இன்று தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

(சி-9286)

நிர்வாகி

# மீண்டும் உயிர்த்தெழும் அமெரிக்க, ருஷ்ய ஒற்றாடல் உலகம்

**பாலகுமாரன்**

அமெரிக்காவின் வாசிங்டன் நகரின் பிரதான தேவாலயமொன்றின் அருகாமையிலுள்ள அஞ்சல் பெட்டி ஒன்று இன்று உலகப் புகழ் பெற்று விட்டது. இவ்வஞ்சற்பெட்டியின் நிழற்படங்கள் வராத மேற்குலக புதின இதழ்களே இன்று இல்லையென்று கூறலாம். ஒற்றாடல் உலகத்தையே ஒரு கலக்கு கலக்கிய அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையின் (C I A) மூத்த அதிகாரியான அல்றிச் ஏம்ஸ் (Aldrich Ames) என்பவரின்விவகாரத்தில் இவ்வஞ்சல் பெட்டியும் சம்பந்தப்பட்டிருப்பதே இதற்கு காரணம் FBI எனப்படும் அமெரிக்க உள்ளக புலனாய்வு அதிகாரிகளினால் தான் கண்காணிக்கப்படுவதை அறியாத ஏம்ஸ் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் எட்டாம் திகதி இவ்வஞ்சல் பெட்டி மீது குறுக்குமறுக்குமாக கீறப்பட்டிருந்த வெண்கட்டி கோடுகளை அவதானிக்கும் போது படமாக்கப்பட்டார் ஏனென்றால் இக்கோடுகள் அவரது ருஷ்ய தொடர்பாளரான அலெக்சாண்டர் லொசன் கோவால் கீறப்பட்டவையாகும். இதன் பொருள் ருஷ்யத் தரப்பால் ஏம்சுக்கு வழங்கப்பட்ட கையூட்டுப் பணத்தின் கடைசித் தவணைப் பணத்தைப்பெற அவர் போகொட்டாவிற்கு செல்லலாம் (கொலம்பிய தலைநகர்) என்பதாகும் இந்த லொசன்கோ வேறு யாருமில்லை. இவர்தான் ருஷ்யாவின் புதிய புலனாய்வுத் துறையான S.V.R எனப்படும் (முன்னைய கே.ஜி.பி) ருஷ்ய வெளிநாட்டு புலனாய்வுத் துறையின் அமெரிக்கபொறுப் பதிகாரியாவார் இவர் பின்னர் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்.

கடந்த வருடம் பிற்பகுதியிலிருந்தேதீவிரமாகF B I யால் கண்காணிக்கப்பட்டபின் அண்மையில் கைதாகியஏம்ஸ் இதுவரை 1.5 மிலியன் டொலர்களை ருஷ்யத் தரப்பிலிருந்து பெற்றதாகக் கூறப்படுகின்றது. பலவருடங்களாகவே ருஷ்யத் தரப்பிற்கு உளவுத் தகவல்களை கொடுத்து வந்த ஏம்சின் கைது சி. ஐ. ஏ. யின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கி அமெரிக்க சனாதிபதியையே தலைகுனிய வைத்துள்ளது. 1985 ஆம் ஆண்டின் பின் இற்றைவரை இவ்வாறாக பலர் சோவியத் தரப்பு உளவாளிகளாக மாறியமை காணப்பட்டமை சிஐஏயின் ஓட்டை உடைசல்களை பெரிதாக வெளிக்காட்டி விட்டன. ருஷ்யாவை கடுப்பாக கிளிங்டன் கண்டித்த போதும் யெல்ட்சின் தரப்பில் அதனை பெரிதுபடுத்தியதாகத்தெரியவில்லை இப்போது என்னவென்றால் இத்தகைய வேறு யாரும் உளவாளிகள் தனது அமைப்பிற்குள் உள்ளனரா என்பதை அறிவதில் சி. ஐ. ஏயின் புதிய தலைவரான யேம்ஸ்வூல்ஸி James Woolscy தனது முழுக்கவனத்தையும் செலுத்த நேர்ந்துள்ளது.

மிக நீண்ட காலமாகவே இத்தகைய பலத்த சந்தேகம் சி. ஐ. ஏக்குள் இருந்து வந்தது. சோவியத் புலனாய்வுத் துறையால் நேரடியாக கட்டுப்படுத்தப்பட்டுதனது அமைப்பிற்குள் மிக ஆழமாக ஊடுருவி நிலவறைக்குள் பதுங்கியிருக்கும் வெளவெலி போல செயற்படும்உளவாளி (யாரென்பதை அறிய சி. ஐ. ஏ. மிகக் கடுமையாக முயன்றது. குறிப்பாக தனது முறியடிப்பு அல்லது தடுப்பு புலனாய்வுத் துறைக்கு(Counterintelligence உதவிய சோவியத் தரப்பு இரட்டை உளவாளிகள் DoubleAgents பலர் கே. ஜி.பியால் கண்டுபிடிக்கப்பட்டு கடும் சித்திரவதைகளின் பின்னர் கொல்லப்பட்டமை எவ்வாறுநிகழ்கின்றதெனசி.ஐ.ஏ தனதுதலையைப்போட்டுஇதுவரைஉடைத்துவந்துள்ளதுஅதிலும்குறிப்பாகதடுப்புபுலனாய்வுத் துறையில் சிலந்தி வலை போல - வலைகளை பின்னுவதில் அங்கில்டொன் (James Jesus Angleton)20 வருடத்திற்கு மேலாக இந்த உளவாளி யாரென்பதை அறிய முற்பட்டு - எவரையும் நம்பாது - பகல் நேரத்தில் கூட தனது அறையை, இருட்டாடாக்கி தேடிய ''சோவியத் உள்ளாளை'' கண்டுபிடிக்க முடியாமல் குறிப்பாக குழம்பி எல்லோரையும் சந்தேகிக்கும் மனநோய் சிதைவிற்குள்ளாகி 1974 ஆம் ஆண்டு பதவி விலக்கப்பட்டவரலாறுஇப்போது நினைவு கூரப்படுகின்றது எனவே பனிப்போர் நிலவிய காலத்தில் மேற்குலகிற்கு பெரும் பெறுமதியான தகவல்கள் அளித்த நாயக்பென்கோவ்ஸ்கிற்குColcgPenkovsky 1964ஆம்ஆண்டளவில் கைதாகி பெரும் வதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டது போல பல நிகழ்வுகள் பின் நடைபெற்றமைக்கு ஏம்சே காரணம் என்பது மிகக்காலம் தாழ்த்தியே இப்போது காணப்பட்டுள்ளது. தனது32வருட கால சேவையில் தொடக்கத்தில் அமெரிக்காவிற்கும் பின் சோவியத்திற்கும் தற்போது ருஷ்யாவிற்கும் தொடர்ந்து ஏம்ஸ் தகவல்களை வழங்கியமை பெருத்த அவமானமானதாக மேற்குலக இதழ்கள் வருணிக்கின்றன.

அல்றிச் ஏம்சால் விளைத்த தீங்குகளின் அளவு எவ்வளவு என்பது இப்போதைக்கு மதிப்பிட முடியாதது என்றே கருதப்படுகின்றது. ஏனென்றால் 1980 களில் ஏம்ஸ் சோவியத் உட்பட கிழக்கு ஐரோப்பிய பகுதிகட்கான முறியடிப்பு புலனாய்வுத்துறைக்கு பொறுப்பானவராக இருந்தார். எனவே இக்கால கட்டத்தில் எவ்வளவு தீங்கினை அவர் விளைவித்திருக்க முடியும் என்பது எவராலும் ஊகிக்க முடிகிற விடயம் இப்போது வெளிவந்துள்ள தகவல்களின்படி 20க்கு மேற்பட்ட சி.ஐ.ஏயின் நடவடிக்கைகள் தோல்வியில் முடிவடைய 10க்கு மேற்பட்ட அமெரிக்காவிற்காக ஒற்றறிந்த சோவியத் இரட்டை உளவாளிகள் தலை சீவப்பட இவரே காரணம் என அறியப்பட்டுள்ளது. பொதுவாக அமெரிக்கஒற்றாடல் வரலாற்றில் 1985ஆம் ஆண்டே மிக மோசமானதாக கருதப்படுகின்றது. இவ்வாண்டிலிருந்தேகடற்படை அதிகாரியாக இருந்து கடற்படைஇரகசியங்களை சோவியத்திற்கு வழங்கிய யோன் வோக்கர் தேசிய பாதுகாப்பு நிறுவனத்தில் பணியாற்றும் போது சந்தேகங்கள் தொடர்பான தகவல்கள் அளித்த றொனால்ட் யெல்ரன் இராணுவ தொலைத் தொடர்பாளராக இருந்து பல இரகசிய தொலைத் தொடர்பு தொழில்நுட்பங்களை சோவியத்திற்கு விற்ற யேம்ஸ் கோல் போன்றோர் கைதாகினர். 1985-ம் ஆண்டிலிருந்தே ஏம்சும் தனது காட்டிக் கொடுக்கும் பணியை ஆரம்பித்தார் எனப்படுகின்றது.

> ''ருஷ்யாவிற்கும் தனது தேசிய நலன்களை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு உண்டு எப்போதுமே எமது நலன்களும் மேற்குலக நலன்களும் ஒரேமாதிரியாக இருக்கமுடியாது''
>
> -ருஷ்யத்தரப்பு வாதம்
>
> 'இனிமேல் ருஷ்யா தொடர்பான எமது அணுகுமுறையாலும் வெறும் குருட்டு நம்பிக்கைகளின் அடிப்படையிலோ அல்லது பிறர்க்குதவும் அறப்பண்பின்அடிப்படையிலோ அமையாது அவை தெளிவாக வகுக்கப்பட்ட அமெரிக்க நலன்களின் அடிப்படையில் அமையும்''
>
> -அமெரிக்க தரப்பு நிலைப்பாடு
>
> எப்போதும் நாடுகட்கு நிரந்தர நண்பரோ, பகைவரோ கிடையாது நிரந்தரமானது அவர்களின் சொந்த நலன்கள் மட்டுமே''
>
> -உலகப்பொது நிலைப்பாடு

ஏனெனில் 1980களில் அமெரிக்காவிற்கான சோவியத்தூதர் அலுவலகத்தின் உள்ளே இரகசியமாக என்ன நடக்கின்றது என்பதை அறிய உதவிய அவ்வலுவலக அதிகாரிகளை - பெறுமதிமிக்க உளவாளிகளாக அமெரிக்க தரப்பால் கருதப்பட்ட- வலேரி மார்டினோவும் சேர்ஜி மோடோரினும் 1985 பின் கே.ஜி.பியால் பெரும் கொடும் வதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டமைக்கும் ஏம்சே காரணமாகவிருந்துள்ளார். அதுமட்டுமன்றி அக்கால கட்டத்தில் மிகப் பரபரப்பாக பேசப்பட்ட விற்றாலி யுரெச்சென்கோ (Vitaly Yurchenko) விவகாரத்திலும் ஏம்ஸ் சம்பந்தப்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றது. கே. ஜி.பியின் வட அமெரிக்க நடவடிக்கைகட்கு உதவிப்பொறுப்பாகவிருந்த இவர் அமெரிக்க உளவாளியாகி மேற்குலகிற்கு தப்பி புகலிடம் தேடியவர். அப்போது எட் வேட்லீ கார்வேட் என்கிற அமெரிக்க தரப்பு உளவாளியையும் காட்டிக்கொடுத்தவர் பின் ஒரு நாள் இவர் திடீரென சோவியத்திற்கு மீண்டும் தப்பிச் சென்றார். இவ் விவகாரம் பெருத்த தலைவலியாக சிரேக்கு மாறியது. இந்த யுரென் சென்கோவை அப்போது விசாரித்த ஏம்சே இவ்விவகாரத்திலும் சம்பந்பட்டிருப்பதும் இப்போது வெளிவந்துள்ளது. யுரென் சென்கோ எக்கட்டத்திலும் ஏம்சோடான தனதுதொடர்பை வெளிப்படுத்தவேயில்லை என்பது இங்கே குறிப்பிட வேண்டியது.

இங்குள்ள முக்கிய சிக்கல் என்னவென்றால் சோவியத் வீழ்ச்சியின் பின்னரும் ஏம்ஸ் தனது வேலைகளைத் தொடர்ந்ததைத்தான் அண்மையில் அவரது காட்டிக் கொடுப்பொன்றானது மிக விபரீதமானதாக அமெரிக்க தரப்பால் கருதப்படுகின்றது. மொஸ்கோவில் கே.ஜி.பியின் தலைமை பணியகத்திலே சோவியத் முறியடிப்பு புலனாய்வுத்துறையில் ஏம்சைப் போன்ற தரத்திலே பணியாற்றி அமெரிக்க தரப்பாளராக செயற்பட்ட 'புரோலோவ்' (Prologue) என குறியீட்டுப்பெயரால் அழைக்கப்பட்ட ஒற்றர் ஒருவரை ஏம்ஸ் காட்டிக் கொடுத்ததால் 1990 ஆம் ஆண்டளவில் அவர் கதையும் முடிந்தது. இங்குள்ள வியப்புஎன்னவென்றால் ஏம்சின் தந்தையும் இதே துறையில் சி. ஐ. ஏ. யில் பணியாற்றியவர். ஏம்சின்மனைவியோ கொலம்பியாவைச் சேர்ந்தவர். மெக்சிக்கோவில் சி. ஐ. ஏயின் தகவல் கொடுப்போரில் ஒருவராக இருந்தவர். எனவே ஏம்ஸ் பின்னர் போதைப் பொருள் தடுப்பு புலனாய்வுத் துறையில் பணியாற்றிய போது தனது மனைவிக்கு ஊடாக கொலம்பிய போதைப் பொருள் கடத்தல் மன்னர்கட்கு தகவல்கள் வழங்கியிருக்கலாமென்றும் கருதப்படுகின்றது.

இவ்வளவு வேலையையும் பல்லாண்டு காலமாக ஏம்ஸ் செய்தபோது சி. ஐ. ஏ. என்ன செய்தது என்கிற வினா இப்பொழுது எழுந்துள்ளது. அதிலும்குறிப்பாக மிக ஆடம்பரமானவாழ்க்கை மிகத் தாராளமாக பணத்தை செலவழித்து வாழ்ந்த அவர் போக்கினை சி.ஐ.ஏ. ஏன்சந்தேகப்படவில்லையென்று இப்போது கேட்கப்படுகின்றது. அத்தோடு 1986,1991 என இரு ஆண்டிலும் ஏம்ஸ் பொய் சொல்கிறாரா என்றறதை கண்டு பிடிக்க நடாத்திய (Polygraphic Test) பரிசோதனையும் வெற்றி பெறாமைக்கு ஏம்ஸ் கேஜிபியால் வழங்கப்பட்டஏதேனும் உத்திகளை கையாண்டு விசேட மருந்துகளை உட்கொண்டு ஏமாற்றியிருக்கலாம். என்றும் இப்போது சந்தேகிக்கப்படுகின்றது. எது எப்படி இருந்த போதும் ஏம்சின் விவகாரம் இன்று அமெரிக்க - சோவியத் உறவில் பெரும் விரிசலை ஏற்படுத்திய தோடு பனிப்போரின் பின் உளவுத்தாபன வேலைகள் முக்கியமற்றவையாகின்றன என்கிற நிலைப்பாட்டையும் மாற்றுவதாக கருதப்படுகின்றது. அத்தோடு அண்மைக் காலமாக ருஷ்யத் தரப்பின் போக்கு குறிப்பாக அது தன்னுடைய முக்கியத்துவத்தை சருவதேச அரங்கில் மீண்டும் நிலைப்படுத்த முயல்வதும் பெருத்த கேள்விகளை அமெரிக்க ஒற்றாடல் உலகில் இப்போது ஏற்யடுத்தியுள்ளது.

குறிப்பாக ருஷ்ய கேஜிபியின் செயற்பாடுகள் குறித்து இப்போது மீண்டும் கவலையும் சந்தேகமும் மேற்குலகில் வலுக்கின்றன. 1991ஆம் ஆண்டு கோர்பச்சேவுக்கு எதிரான சதிப்புரட்சியில் கே.ஜி.பியும் சம்பந்தப்பட்ட பின் கோப்பர்ச்சேவால் கே.ஜி.பி துண்டாடப்பட்டது வெளிநாட்டு புலனாய்வுப் பணிகளை கே.ஜி.பியினர் தொடர்ந்த அதே நேரத்தில் உள்நாட்டு புலனாய்வுப்பகுதி கலைக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சு என புது வடிவில் அமைக்கப்பட்டது. கடந்த அக்டோபரில் யெல்சினுக்கு எதிராக நடைபெற்ற குழப்பங்களில் இப்பாதுகாப்பு அமைச்சும் சம்பந்தப்பட்டதால் அதையும் யெல்ட்சின் கலைத்தார் இப்போது உள்நாட்டு புலனாய்வுத்துறை சமஷ்டி முறியடிப்பு புலனாய்வுச் சேவை (Federal Counter Intelligence Service எனயெல்சினால்மாற்றப்பட்டது. என்னதான் மாற்றங்கள் ஏற்பட்டாலும் உண்மை நிலை என்னவென்றால் இன்றும் அதே கே.ஜி.பியின் புலனாய்வு ஆளணியினர் தொடர்ந்தும்பணிபுரிகின்றனர்என்பதே யாகும். அதிலும் உள்நாட்டில் தீவிர தேசியவாதம்,இரகசிய வன்முறைக் குழுக்கள் தலையெடுக்கும் கட்டத்தில் இவர்களைநம்பியே யெல்சின் செயற்பட முடிகிறது ஆனால் கே.ஜி.பியின்விசுவாசம் யாருக்கு என்பது திட்டவட்டமாக சொல்லமுடியாதஒன்றாகவே கருதப்படுகின்றது. இன்னொரு அரசியல் குழப்பம் ஏற்படும் போது கே. ஜி. பி எவ்வாறு செயற்படும் என்பது கேள்விக்குறியே ஏனென்றால் ருஷ்யாவின் இன்றைய தாழ்நிலைக்கு யெல்ட்சினும் காரணம் என்றே பல கே.ஜி. பியினர் கருதுவதாக தெரிகின்றது. எனவே இக்கட்டத்திலே தான் ஏம்சின் விவகாரம் வெளிவந்துள்ளது.

ருஷ்யாவின் தற்போதைய புதிய போக்கும் அமெரிக்காவிற்கு பிடித்தமற்றதாக தெரிகின்றது. அண்மைக்காலமாக ருஷ்யாதனது இடத்தை சருவதேச அரசியல் அரங்கில் வலுப்படுத்த முயல்வதாக தெரிகின்றது. அண்மையில் யெல்ட்சின் ருஷ்யாவிற்கும் பாதுகாக்கப்பட வேண்டிய தேசிய நலன்கள் உண்டென்பதை உலகம் அறிய வேண்டும் என்றார். மேற்குலக நலன்களோடு எப்போதுமே ருஷ்ய நலன்கள் ஒத்துப் போகாது என ருஷ்யாஅரசியலாளர் ஒருவர் அண்மையில் குறிப்பிட்டார் அண்மைக்காலமாகவே ருஷ்யா அமெரிக்காவிற்குஅறிவிக்காமலோ(அமெரிக்கா செய்வதுபோல சிலசருவதேச சிக்கல்களில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்திமுன் முயற்சிகளும் எடுக்கின்றது. சேர்பியருக்கு ஆதரவான தனது நிலைப்பாட்டினை பொசுனிய விவகாரத்தில் ஒரு துரும்புச்சீட்டாக ருஷ்யா பயன்படுத்த முனைகிறது. சருவதேச விவகாரங்களில் தான் ஓரங்கட்டப்படுவதை விரும்பாத ருஷ்யாவின் இப்புதிய போக்கும் புலனாய்வு அமைப்புக்களின் மீள் முக்கியத்துவத்தையே காட்டுவதாக அமைகின்றது. ஏம்சின் விவகாரத்தில் தொடர்புபட்ட லொசன்கோவை நாடு கடத்தியபோது கிளின்டன் ''இனிமேல் ருஷ்யா தொடர்பான எமது அணுகுமுறை என்பது வெறும் குருட்டு நம்பிக்கைகளின் அடிப்படையிலோ, பிறர்க்குத வேண்டும் என்கிற அறப்பண்பின் அடிப்படையிலோ அமையாது அது தெளிவாக வகுக்கப்பட்ட அமெரிக்க நலன்களின் அடிப்படையிலே அமையும்', என்றார்.ஏனென்றால் நாடுகட்கு நிரந்தர நண்பரோ பகைவரோ கிடையாது. நிரந்தரமாக இருப்பது அவர்களின் சொந்த நலன்கள் மட்டுமே என்பதே பொது உண்மையல்லவா

(4ஆம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# டென்மார்க் அரசாங்கத்தை வீழ்த்திய இலங்கை தமிழ் அகதிகள் விவகாரம்

**அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி ஒரு நாட்டின் அரசை வீழ்த்தியது**

தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதியானது டென்மார்க் நாட்டில் பத்தாண்டு காலம் அரசுசெலுத்திய அரசாங்கத்தை ஆட்சியிலிருந்தே நீக்கியுள்ளது. தமிழ் அகதிகளுடைய விவகாரத்தில் முறைகேடாக நடந்தமையால் டென்மார்க் அரசு பதவியிறங்கியது என்றளவில் இந்த விவகாரம் உலகச்செய்தித்தாபனங்களால் எடுத்தாளப்பட்டாலும், ஓர் ஐரோப்பிய நாட்டின் அரசாங்கத்தையே வீழ்த்துமளவிற்கு தமிழர்பிரச்சினை அடைந்துள்ள பாரதூரத் தன்மைகளை விளக்குமளவிற்கு இந்த விடயம் இதுவரை அலசப்படவில்லை.

பெரும்பாலான டெனிஸ் மக்களால் அறியப்பட்ட அதேவேளை பெரும்பாலான தமிழ்மக்களால்அறியப்படாத இந்தத்தமிழர் விவகாரம் சுமார் 6000 பக்கங்களைக் கொண்ட அறிக்கையாகும். ஏறத்தாழ 100 மில்லியன். இலங்கை ரூபாய்வரை செலவிடப்பட்டு, கோண்சல்ற் என்பவர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்தவிசாரணையே தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் கூற்றுவனாக அமைந்தது. உண்மையில் இந்த விவகாரம் டென்மார்க்கின் வரலாற்றில் மட்டுமல்ல இலங்கைத்தமிழர் வரலாற்றிலும் ஓர் முக்கியம் வாய்ந்த நிகழ்வாகும்.

தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினத்தன்று டென்மார்க் பிரதம மந்திரியான திரு போல்சுலுட்டரிடம் கையளிக்கப்பட்ட மேற்கண்ட அறிக்கையின் சாராம்சம் என்ன? இதன்மூலம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் யாது? இந்தநிகழ்வு இலங்கையில் ஓர் அமைதி தோன்றுவதற்கான புரிந்துணர்வை அந் நாட்டின் அரசியல் மட்டங்களில் ஏற்படுத்தாதா? எனப் பல்வேறு தளங்களிலும் இவ்வறிக்கையின் முக்கியத்துவத்தை தமிழர்கள் தற்போது நாளுக்கு நாள் வேகமாகத் துருவத்தொடங்கியுள்ளனர்.

இந்தச் சட்ட மீறல் விவகாரத்திற்கு பிரதான காரணமாக இருந்தவர் டென்மார்க்கின் பழைய நீதிமந்திரி திரு. எரிக் நீன்கன்சன். இவர் டென்மார்க்கில் அடைக்கலம் புகுந்த தமிழர்களுக்கிருந்த குடும்ப இணைப்பு தொடர்பான அடிப்படை உரிமையைப்புறக்கணித்து நடந்தார். 1987 ஆடி இலங்கை-இந்திய அமைதி ஒப்பந்தத்துடன் ஆரம்பித்து 1988 மார்கழி வரை இப் பாராமுகத் தன்மை நடந்தேறியுள்ளது. இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் இந்திய அமைதி காக்கும் படை நிலைகொண்டிருந்த காலம் தமிழ் மக்கள் அங்கு பாதுகாப்பாக வாழக்கூடிய காலமென இவர் எடுத்துக் கொண்ட முடிவும், அதனடிப்படையில் தன்னிச்சையாக மேற்கொண்ட நடவடிக்கைகளுமே இறுதியில் இவரையும் அரசையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தக்காரணமாயின.

இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருந்த காலத்தில் ஐ. நா. சபை அகதிகள் பிரிவு (UNICHR) அறிக்கையொன்று, இலங்கையின் வடக்குக் கிழக்குப்பகுதியில் தமிழர்கள்அமைதியாக வாழலாமென விதந்துரைத்தது. இக் காலத்தில் இந்தியாவிலிருந்து பெருந்தொகையான இலங்கைத் தமிழ் அகதிகள் தாயாகவே முன்வந்து தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும், இது கூறியது. இந்தச் செய்தியை ஆதாரமாகக்கொண்டு டென்மார்க்கில் அடைக்கலம் பெற்றிருந்த சுமார் 5000 தமிழ் அகதிகளில், இரண்டாண்டுகளைப் பூர்த்திசெய்யாத 3000 பேரை தாய் நாட்டிற்கு திருப்பியனுப்பலாமென இவர் தீர்மானித்தார். எனவே இங்கிருக்கும் தமிழர்களே திருப்பியனுப்பப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கும் போது அவர்களுடைய குடும்பங்களை இங்கு வரவழைத்துக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் இவர் முடிவெடுத்தார்.

இப்படியொரு தீர்மானத்தை எடுத்துக் கொண்ட நீதியமைச்சர் இதற்கான அனுமதியை சட்டரீதியாக பாராளுமன்றத்தில் பெற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்து வாய் மூலமான உத்தரவுகளைக் குடும்ப இணைப்புக் காரியாலயத்தில் பணிபுரிந்த அதிகாரிகளுக்கு வழங்கினார். 1987 புரட்டாதி கூடப்பட்ட இவ் அதிகாரிகளுக்குரிய கூட்டத்தில் 3000 இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பியனுப்புவது தொடர்பான மந்திரியின் கருத்தை பலர் ஏற்றுக் கொண்டதாக இல்லை. ஆயினும் தமிழர்களின் குடும்பங்களை எடுத்துக் கொடுக்கும் நடவடிக்கைகளை கவனியாது விட அமைச்சர் தான் எடுத்த முடிவில் எந்த மாற்றமும் செய்யவில்லை. மேலும் இத் தருணத்தில் தமிழர்களுடைய 60குடும்பங்கள் தொடர்பான விண்ணப்பங்கள்பூரணமாகப் பரிசீலிக்கப்பட்டு தனியே பொறுப்பதிகாரியின் கையொப்பத்திற்காகக்காத்திருந்தன. ஆயினும் நீதிமந்திரியின் மேற்கண்ட முடிவினால் இவை கையொப்பமிடப்படாமலே கிடப்பில் போடப்பட்டன.

அமைதிப்படை வடக்கு-கிழக்கில் நிலைகொண்ட குறுகிய காலப் பகுதிக்குள் மறுபடியும் யுத்தம் மூண்டது. தமது குடும்பங்களை வரவழைக்க முடியுமெனக் காத்திருந்த தமிழர்கள் தமது விண்ணப்பங்களுக்கோ எந்தவித பதிலையும் பெறாது ஏமாற்றமடைந்தனர். இதில் பல விண்ணப்பங்கள் மிக அவசரமானவை; வைத்திய அத்தாட்சிப் பத்திரங்கள் இணைக்கப்பட்டிருந்தவை. இதுதவிர மேலும் பல குடும்பங்கள் பெரும் ஆபத்தான. நிலையில் சிக்குண்டிருப்பதாக தகவல்கள் கிடைத்தன இது பற்றி 1988 வைகாசி மாதம் வரை மூன்று தடவைகள் மந்திரியுடன் சந்திப்புக்கள்நடாத்தப்பட்டு, தமிழ் அகதிகளின் குடும்பங்கள் டென்மார்க் வரவழைக்கப் படவேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டும் கூட நீதி மந்திரி தனது போக்கில் எதுவித மாற்றமும் கொண்டாரில்லை.

இவை இப்படியிருக்க 1988 சித்திரை மாதம் டென்மார்க் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, மறுபடியும் தேர்தல் நடைபெற்றது. யூன் மாதம் மேற்படி பழமைபேணும்கட்சி வேறுசில கட்சிகளுடன்இணைந்து, சென்ற தடவை போல கூட்டரசாங்கமொன்றை ஏற்படுத்திக் கொண்டது. இவ்வரசாங்கத்திலும் திரு. எரிக் நீன்கன்சனே நீதி மந்திரியாக பதவியேற்றார். இதன் பின்னும் இலங்கையின் வடக்கு -கிழக்கில் பாதுகாப்பான சூழ்நிலை நிலவுகின்றதென்ற தனது முடிவில் இவர் மாற்றம் கொள்ளவில்லை.

திரு. எரிக் நீன்கன்சன் டென்மார்க்கின் முதிர்ந்த அரசியல்வாதி. நாட்டிற்கு அயராது சேவையாற்றிய முக்கிய பிரமுகர். இருந்தும் இவர் ஏன் இத்தகைய எத்தனங்களை தொடர்ந்தும்கடைப்பிடித்தாரென்பது பிரதான கேள்வியாகும். இதற்கான நெறிப்படுத்தலை டென்மார்க்கின் அப்போதைய அரசியல் சூழ்நிலையும் இவர் மீது ஏற்படுத்தியிருக்க வேண்டுமென்பதும் மறுக்கக் கூடிய விடயமல்ல.

கே. வீ. ஆர். என்ற பெயரில் அமைவு பெற்ற இக் கூட்டரசாங்கத்தில் பழமைபேணும் கட்சி தனதுகூட்டுக்கட்சியான வென்ஸ்ரா கட்சியை விட சில ஆசனங்களேமுன்னணியில் நின்றது. ஆனால் சோசலிச குடியரசுக் கட்சியோ பெரும்பான்மை ஸ்தானங்களில் வெற்றி பெற்றும் அறுதிப் பெரும்பான்மை இன்மையால் எதிர்க்கட்சி ஸ்தானத்திலேயே தொடர்ந்தும் இருந்தது. இதில் குறிப்பிடவேண்டிய விடயம் 1988-ல் நடந்து முடிந்த தேர்தலானது அகதிகளுக்கெதிரான கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் கட்சிகளுக்கே கூடுதல் வெற்றி வாய்ப்பை அளித்திருந்தது. இதை அகதிகள் எதிர்ப்புணர்வின் வளர்ச்சி நிலையென்றும் கூறலாம். எனவே மேற்கண்ட கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளவும், அகதிகளுக்கெதிராக வளர்ச்சி பெறும் உணர்வலைகளுக்கு முகம் கொடுக்கவும் அரசு அகதிகளுக்கெதிரான சில இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முயன்றது. இதற்குப் பலியாவதற்குரிய சகல பின்னணிகளும் கொண்ட அகதிக் குழுவினராக தமிழர்களே காணப்பட்டனரென்பதை இந்தவிவகாரத்தில் ஒரு பக்கக் காரணியாகக் கூறலாம்.

இந்திய அமைதிப் படைச் செய்தித் தொடர்புகளால் வந்த தகவல்களும், ஐ.நா. சபை அகதிகள் பிரிவு அறிக்கையும் அமைதி நிலவுவதாக தகவல் தர மறுபக்கம் வேறு பல தகவல் சாதனங்கள் இதற்கு முற்றிலும் முரணான செய்திகளை வெளியிட்டன. இக்கால கட்டத்தில் ஐ. நா. வின் தென்னாசிய அகதிகள் பிரிவில் திரு. சம்பத்குமார் என்றவரது பெயரும் கூடுதலாக பத்திரிகைகளில் பேசப்பட்டது. இந்த முரண்பாடான தகவல்களிடையே நின்று டென்மார்க்கின் பிரதான பத்திரிகைகளில் ஒன்றான எக்ஸ்ரா பிலதற் இந்த விவகாரத்தைக் கிளற ஆரம்பித்தது. மேற்படி இந்தக்குடும்ப ஒன்றிணைப்புத் தடை நிலை அமுலில் இருந்தபோது டென்மார்க்கில் இருக்கும் ஒருவரின் மனைவி யுத்த காரணங்களால் மரணமடைந்ததாக இப்பத்திரிகை புகைப் படங்களுடன் செய்தி வெளியிட்டது. இது போல் மற்றும் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டதற்கான தகவல்களும் வெளியாகின. இதைத்தொடர்ந்து விடயம் சூடு பிடித்தது. எதிர்க்கட்சிகள் இதில் பெரும் அக்கறை செலுத்தி அரசை விமரிசிக்கத் தொடங்கின. விஷயம் மோசமான கட்டத்தை அடைந்த போது தான் மந்திரி சில விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்க உடன்பட்டார். ஆயினும் 1989 தை 10ஆம் திகதி நீதி மந்திரியானவர்மாற்றப்பட்டு இவருடைய இடத்திற்கு ஏச். பீ. கிளவுசன் என்பவர் நியமிக்கப்பட்டார். எரிக்நீன்கன்சன் நீதி மந்திரி பதவியிலிருந்து மாற்றப்பட்டு பாராளுமன்றக்குழு தலைவராக்கப் பட்டார்.

புதிய நீதியமைச்சரும் தமிழர் விவகாரத்தில் பழைய நீதியமைச்சரின் தவறுகளைச்சுட்டிக்காட்டியதாகத் தெரியவில்லை. இவர் பிரதமர் போல்சுலுட்டரைச் சந்தித்து இதுபற்றித் தகவல் பெற்றிருக்கிறார். தமிழர்களுடைய குடும்ப இணைப்பை வழங்கும் அனுமதியை உடனடியாக செயற்படுத்தும்படி பிரதமர் இவரிடம் கூறியுள்ளார். ஒரு குறுகியகாலத்திற்குள் தாமதித்து வைக்கப்பட்டிருந்த விண்ணப்பங்கள் மறுபடியும் எடுக்கப்பட்டு அவர்களுக்கு மிகவேகமாக வீசாக்கள் வழங்கப்பட்டன

**கே. எஸ். துரை**

ஏச். பீ. கிளவுசன் பதவியேற்றவுடன் இலங்கையின் வடக்குக் கிழக்கில் அமைதி நிலவவில்லையா? அல்லது அமைதிநிலவியதா? என்ற வாதப்பிரதிவாதங்களுக்கு இடமின்றி பிரச்சினை இரண்டாவதுகட்டத்திற்குள் பிரவேசிக்கிறது. நாட்டின் சகலவிதமான நடவடிக்கைகளுக்கும் சட்டங்கள் வகுக்கப்பட்டு அதனடிப்படையிலேயே முழுக்கருமங்களும் நடைபெறும் நாடு டென்மார்க். ஒருவனை ஒருவனாகவே கணிக்கும் அரசியல் தத்துவத்தின் வெற்றிகரமான பணியை இங்கு சகல மட்டங்களிலும் காணலாம். எனவே டென்மார்க்கின் பிரதான சட்டமொன்றை நீதியமைச்சர் மீறியது தமிழர்களுக்கு மட்டுமல்ல டென்மார்கின் பிரதான சட்டத்திற்கு மாறான செயலும்கூட என்ற வாதம் உருவெடுத்ததுஆகவே தமிழர்களுக்கு மாறாகச் செய்யப்பட்ட இந்தப் புறக்கணிப்புச் செயலின் மறுபக்கத்தில் டெனிஸ் சட்டவிதியொன்றும் அலட்சியம் செய்யப்பட்டுள்ளதை எதிர்க் கட்சிகள் சுட்டிக்காட்டின. மேலும் அதிருப்திகள் ஓங்கின.

மந்திரியை மாற்றம் செய்வதானால் மட்டும் தவற்றைமறைத்துவிட முடியாது? குற்றம் குற்றமே! என்றவாறு மேலெழுந்த ஆட்சேபனைகள் கடைசியில் அரசாங்கத்திற்கே பாதகம் தரும் நிலையை உருவாக்கியவுடன் பிரதமமந்திரி போல் சுலுட்டர் விழித்துக் கொண்டார். இந்தச்சந்தர்ப்பத்தில்தான் இவர் தனது வரலாற்றுப்புகழ்மிக்க நிலவிரிப்பு சொற்பொழிவை நிகழ்த்தினார்.

''நிலவிரிப்புக்குக் கீழே நாம் எதையும் மறைக்கவில்லை சகலதையும் திறந்த மனத்துடனேயே பேசுகிறோம்'' என்று 1989 சித்திரை 25ஆம் திகதி இந்தவிவகாரத்தைப் பற்றி பிரதமர் போல் சுலுட்டர் வெளிப்படையாகப் பேசினார். அந்தச்சொற்பொழிவில் அமைதி ஒப்பந்தம் செய்யப்பட்டதால் தமிழ் அகதிகள் திரும்பிச் செல்லக் கூடியதோர் நிலையிருந்ததாகவும் அப்படியான சூழ்நிலையில் நீதியமைச்சர் எடுத்த முடிவு வெளிப்படையானதென்றும் அதே வேளை தமிழ் அகதிகள் விவகாரம் முற்றாகத்தடை செய்யப்பட்டிருக்கவில்லை என்றும் கூறினார். மேலும் இதற்கு நீதியமைச்சரும் அரசும் பொறுப்பாகவே செயற்பட்டதாகவும் தெரிவித்தார். எனவே இதில் எந்தவித மறைப்பு வேலைகளும் நடைபெறவில்லை என்றே இவரது விடை அமைந்திருந்தது.

எந்த நில விரிப்பில் தமிழர் விவகாரத்தின் பின்னணிகளை மறைக்கவில்லை என்று பிரதமர் சூளுரைத்தாரோ கடைசியில் அதேநிலவிரிப்பிற்குள் தனது அரசியல் வாழ்வையும் மறைத்துக் கொண்டு பிரதம மந்திரிப் பதவியையும் இழந்தார் போல் சுலுட்டர். இதற்குக் காரணமாக அமைந்ததே திரு. மோன் கோண்சல்ற் தலைமையிலான ''தமிழர் விவகாரம்'' என்ற விசாரணைக்குழு அறிக்கை.

அறிக்கையில் கூறப்பட்ட தகவல்களின் படி இந்தச் சட்ட மீறலின் பிரதான குற்றவாளியாக பழைய நீதிமந்திரி எரிக் நீன்கன்சன் காணப்பட்டார். இவருடைய நடவடிக்கைகளுக்கு உடந்தையாக பழமை பேணும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான கிறேற்ற பங்கமுலர், வீ.கே. பிஷர் ஆகியோரும் செயற்பட்டதும் தெரிந்தது. இது தவிர இந்த விடயங்கள் அதிகார துஷ்பிரயோகமென தெரிந்தும், அதற்கு ஏதோ ஓர் வகையில் உடன்போன ஐந்து உயர் ஆலாட்சி அதிகாரிகள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கூறப்பட்டது. பிரதமராகிய போல் சுலுட்டர் இந்த விவகாரத்தில் பாராளுமன்றத்திற்கு பொய்யான தகவல் கூறினார்என்பதும்நிருபணமாகியதுபுதிதாகபதவியேற்ற நீதி மந்திரிஎச்.பீ. கிளவுசனும் பாராளுமன்றத்திற்கு இவ் விவகாரம் தொடர்பாக தவறான வழிகாட்டலையேமேற்

(10ஆம் பக்கம் பார்க்க)

உ

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம் சித்திரை மாதம் 18-ம் நாள் (1-5-1994) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணிமுதல் 11.30 மணி வரையுள்ள மிதுன லக்கின-சுபமுகூர்த்த வேளையில்

எங்கள் மகன் திருநிறை செல்வன்
**ஜெயபாஸ்கரன்**
அவர்களுக்கும்

எங்கள் மகள் திருநிறை செல்வி
**சொர்ணாம்பிகை**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு வல்வெட்டி வேவில் பிள்ளையார் ஆலயத்தில் திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சபையைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

**திரு. திருமதி செல்லையா**
கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

**திரு திருமதி சின்னத்தம்பி**
உழுத்தம்பி, வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(இரு வீட்டார் அழைப்பு)

(8126)

தென்னிந்திய திருச்சபை - யாழ் ஆதீனம்

## நம்பிக்கை இல்லம்
## (HOUSE OF HOPE)

மேற்படி இல்லத்திற்கு உடல் ஊனமுற்ற, வலது குறைந்த ( Physically disabled ) ஐந்து (5) வயதிற்கும் பதினாறு (16) வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர், சிறுமிகள் சேர்த்துக்கொள்ளப்பட இருக்கின்றனர். இதற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் குடும்ப விபரத்துடன் திருமதி P. கதிர்காமர் அவர்களை இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுண்ணாகம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயற்திட்ட பணிப்பாளர்,
தென்னிந்திய திருச்சபை

ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(சி-9272)




பின்வரும் அளவுகளில் எங்கும் விற்பனையாகின்றது
140 கிராம் - 35/- 500 கிராம் - 100/-
தோடம்பழச் சுவையுடன் கூடிய
ஃப்ரூட்டி மிக்ஸ் என்று கேட்டு வாங்கி பருகி மகிழ்வீர்.
(சி-9283)

தென்னிந்திய திருச்சபை
யாழ். ஆதீனம், சாவகச்சேரி

## தொழிற்பயிற்சி நிலையம்

மேற்படி தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சி, தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகிய நெறிகளில் பயிற்சி பெற விரும்புவோர் உங்கள் விண்ணப்பப் பத்திரங்களை காலை 9-00 மணி முதல் மதியம் 12-00 மணி வரை பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

"குரு இல்லம்"
தென்னிந்திய திருச்சபை,
சாவகச்சேரி.

விண்ணப்ப முடிவுத் திகதி 10-05-1994

குறிப்பு;- கடைசியாக முடிவடைந்த பயிற்சி நெறியில் பங்குபற்றி சான்றிதழ்களை பெறாதவர்கள் மேற் குறிப்பிட்ட விலாசத்தில் உங்களது சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

செயற் திட்டப் பணிப்பாளர்,
தென்னிந்திய திருச்சபை

ஆதீன காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(சி-9271)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**96** கலை, வர்த்தகம்
அடுத்த புதிய பிரிவு ஆரம்பம்
30 - 04 - 94
காலை 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் திரு. கலாகரன் | கணக்கியல் திரு. S.K. பிரபாகரன் | வர்த்தகம் திரு. தேவா |
| அளவையியல் திரு. விக்கி | தமிழ் திரு. குழந்தை | இந்து நாகரிகம் I சமயம் திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் திரு. குணராசா | அரசியல் திரு. சிலன் | வரலாறு திரு. சிறிதரன் |

இதுவே இறுதி பிரிவாகும்

அனுமதிகள் இன்று முதல் பெற்றுக்கொள்ளவும்

(சி-9270)

# A/L 96

கலை, வர்த்தகம்

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

மீண்டும் ஓர் புதிய பிரிவு

ஆரம்பம் 30-4-94 சனி 7.00 A. M.

- மாணவர் சமூகம் நன்கு அறிந்த எமது வழமையான ஆசிரியர் குழு
- பிரிவு I, பிரிவு II என்பவற்றிற்கான அனுமதிகள் ஏற்கனவே நிறுத்தப்பட்டுவிட்டன.
- புதிய பிரிவிற்கு குறிப்பிட்டுள்ள மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9273)

# டி. பி. விஜேதுங்காவும் — ஒரு வருட ஜனாதிபதி பதவியும்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

சிறிலங்காவின் ஜனாதிபதியாக டி. பி. விஜேதுங்கா பதவியேற்று இன்னும் சில தினங்களில் ஒருவருடம் பூர்த்தியாகின்றது. அரசியலில் ஒரு வருட ஆட்சிக்காலம் என்பது ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறுகியதொன்றாகிலும். டி. பி. விஜேதுங்காவைப் பொறுத்து அவரது அரசியல் கற்பிதங்கள் பல தவறானவை என்பதும், அவர் பற்றிய கற்பிதங்கள் பல எதிர் மாறானவை என்பதையும் இக்காலப் பகுதி வெளிக்காட்டியுள்ளது.

டி. பி. விஜேதுங்கா ஆட்சிப் பொறுப்பேற்ற போது 'அவர் ஒரு இடைக்கால ஜனாதிபதியே' என அரசிய விமர்சகர்களில் ஒரு பகுதியினரால் விமர்சிக்கப்பட்டது. இதற்கு இவரது அரசியல் ஆளுமை பற்றியும் தலைமைத்துவப்பண்பு பற்றியும் பல மானகேள்விகள் இருந்தமையேகாரணமாகும். ஏனெனில், ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் இவரது அரசியல் செயற்பாடுகள் இவர் ஒரு 'பொம்மை' போன்று செயற்படுபவர் என்றே விமர்சிக்கப் பட வழிவகுத்திருந்தது இவ்வாறானதொரு கற்பிதம் இல்லாது போனால் இப்பதவி அவருக்கு கிட்டியிருக்குமா என்பதும் சந்தேகமே.

48 வருட கால அவரது அரசியல் வாழ்வில் டி. பி. விஜேதுங்கா ஐ.தே கட்சியில் ஏற்பட்ட குத்து வெட்டுகள் எதிலும்பெரும் பங்குஎடுக்கவோ அன்றி, ஆதரவாளர்கள், எதிராளர்கள் என்ற அணியினைஉருவாக்கவோ இல்லை இந்நிலையே டி. பி. விஜேதுங்கா, ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டபோது பெருங்குத்து வெட்டுகள் எதுவுமின்றி ஜனாதிபதிப் பதவிக்கு வரவாய்ப்பாக இருந்தது. அதாவது, டி. பி விஜேதுங்கா ஐ.தே கட்சிக்கு பலப்பரீட்சையில் ஈடுபடக் கூடிய எவருக்கும் அச்சுறுத்தலான சக்தியாக இருக்கவில்லை என்றே அன்று கருதப்பட்டது.

இந்த நிலையில் டி. பி. விஜேதுங்கா பதவி ஏற்றபோது, ஜனாதிபதிபிரேமதாசாவின் எஞ்சியுள்ள பதவிக்காலத்தை நிறைவு செய்யும் ஓர் இடைக்கால ஜனாதிபதியாகவே கொளளப்பட்டார். இந்த நிலையில், சுமார் ஒன்றரை வருடகாலம், அல்லது ஜனாதிபதி அமைப்பு முறையை மாற்றிப் பாராளுமன்றத்திடம் அதிகாரங்களைஒப்படைக்கும்காலம் வரை தான்டி. பிவிஜேதுங்காபதவிவகிப்பார் என்றே கருதப்பட்டது. இதன் அடிப்படையில், பிரேமதாசா சகாப்தம் முடிந்ததையும், அரசியலமைப்பு மாற்றத்தை எதிர்பார்த்துமிருந்த எதிரணியினரும்டி பி.விஜேதுங்கா பதவி ஏற்ற மகிழ்ச்சியை அவருடன் பரிமாறிக் கொண்டனர்.

ஆனால், டி. பி. விஜேதுங்காவின் ஒருவருட ஆட்சிக்காலமானது எதிர்தரப்பினரை மட்டுமல்ல, ஐக்கிய தேசியக் கட்சியினரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்குவதாக அமைந்தது. இவ்விடயத்தில் புரன்லைன் சஞ்சிகை டி. பி. விஜேதுங்கா பற்றிக் குறிப்பிட்டது ஓரளவு பொருத்தப்பாடானதென்றே கொள்ளலாம். "விஜேதுங்கா அமைதியாக இயங்குபவரானாலும் ஒரு பொம்மையல்ல. இதிலே உள்ள எந்தவித சந்தேகங்களும் அவர் ஜனாதிபதியாக - நாயக கோலம் பூண்டவுடன் நீங்கின. மற்றவர்களுடன் கலந்தாலோசித்தாலும் அவரை இலேசாகக் கணிப்பீடு செய்துகொள்ளமுடியாது" என அச்சஞ்சிகை குறிப்பிட்டிருந்தது.

புரன்லைன் குறிப்பிட்டிருப்பது போல் டி. பி. விஜேதுங்கா இலேசாகக் கணிப்பீடு செய்து கொள்ளக் கூடியவரல்ல என்பதற்கு அவரது கடந்த ஒருவருட பதவிக் காலத்தில் நிறையவே ஆதாரங்கள் உண்டு. சுருக்கமாகக் கூறுவதானால், இவர் கடந்த ஒருவருட காலத்தில் அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்புக்களை தலைகீழாகவே அவர் மாற்றினார்.

டி. பி விஜேதுங்கா பதவி ஏற்றவுடன் வெளிப்படுத்திய கருத்துக்கள், உணர்வுகள் என்பனவற்றிற்கும் சுமார் மூன்று மாதங்களின் பின்னர் வெளிப்படுத்திய, செயற்படுத்திய கருத்துக்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் இருந்தன. இம் மூன்று மாத காலமும் அவர் தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் தனது அரசியற் தளத்தை பலப்படுத்திக் கொள்வதற்குமான காலப் பகுதியாகவே பயன்படுத்திக் கொண்டார். இதனை அவரது ஒருவருட ஆட்சியின் முதல் பகுதி என்றே கூறலாம்.

இக்காலப் பகுதியில் டி. பி. விஜேதுங்காவின் கருத்துக்கள், எதிர்த்தரப்பினரின் அபிலாசைகள் குறித்து அக்கறை காட்டுவது போன்றும், இலங்கையில் உள்ள முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தயாராக இருப்பது போலவும் காட்டிக் கொள்ளப்பட்டன. எதிர்க்கட்சியினரின் ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாகச் செயற்படுவதாகக் காட்டிக் கொள்ள முற்பட்டதோடு, அது குறித்த விடயங்களைக் கவனிக்கவென அரசியலமைப்பு விவகார அமைச்சராக சொக்ஸியையும் நியமித்தார்.

இதேபோன்று, இலங்கையின் முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது பற்றியும் பேசினார். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகப் பகிரங்கமாக அறிவித்த டி பி. விஜேதுங்கா "வடக்கு - கிழக்கு பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்த எவரேனும் முன்வந்தால் அது மகத்தான செயலாகும்" எனத் தெரிவித்தார்.

இதேசமயம், இம் மூன்று மாத காலத்தில் ஒரு குட்டிப் பொதுத்தேர்தல் போன்ற ஏழு மாகாண சபைகளின் தேர்தலையும் அவர் தலைமையில், ஐ.தே.க. சந்தித்தது. ஆனால் அது டி. பி விஜேதுங்காவுடன் தொடர்புபடுத்தப்பட்ட தேர்தலாக இதனை எவரும் பார்க்கவில்லை அத்தேர்தலை மறைந்த லலித் அத்துலத்முதலி, பிரேமதாசா ஆகியோரது இறப்பின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவையாகவும், ஐக்கிய தேசிய கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிஆகியவற்றின் அன்றையபலத்தைஅளவிடு தேர்தலாகவே கணிக்கப்பட்டது. அத்தேர்தலின் முடிவே ஓரளவிற்கு ஐ.தே.கவின் வீழ்ச்சிப் போக்கிற்கு கட்டியம் கூறியதாயினும், அதன்முடிவு பெரும் விமர்சனத்திற்குரியதாக மாறவில்லை.

ஆனால் மூன்று மாத காலத்திற்குள் டி. பி. விஜேதுங்கா தனது சுயமான சொரூபத்தை தெளிவாக வெளிக்காட்டத் தொடங்கியிருந்தார். அப்பொழுது அதாவது மூன்று மாத முடிவில் டி. பி விஜேதுங்கா எதிர்க்கட்சிகள் மற்றும் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் மட்டுமல்ல, ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் அதனோடு நட்புச்சக்திகளாக அடையாளம் காணப்பட்ட சக்திகள் தொடர்பாகவும் தனது நிலைப்பாட்டை தெளிவாக வெளிக்காட்டியிருந்தார்.

இதன் ஆரம்பம் டி. பி விஜேதுங்கா தனக்கென ஓர் அரசியல் தளத்தை அமைப்பதில் தொடங்கியது என்றே கொள்ள முடியும். இதுவரையில் பரந்த அரசியல் அடித்தளத்தையோ அன்றி, அணியையோ கொண்டிராத அவர் தனது அரசியல்தளத்தை கண்டிய பௌத்த சிங்கள தளத்தினைக் கொண்டதாக உருவாக்க முனைந்தார், இதன் அடிப்படையில் பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்குப் புதிய தலைமை ஒன்றைக் கொடுக்கவும் சிங்கள தேசியவாதம என்றரீதில்பேரினவாதன சிந்தனையைக் கிளறும் முயற்சியில் ஈடுபட்டார். இதன் தளமாக மலையகத்தையே கருத முற்பட்டார்.

இதன் அடிப்படையில் டி பி. விஜேதுங்கா செயற்பட முற்பட்ட போது இனப்பிரச்சினை தொடர்பான அவரது நிலைப்பாடு முற்றாக மாற்றம் கண்டது. பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு என்பது ஏற்புடையதாக இருக்கவில்லை. இந்நிலையிலேயே டி. பி. விஜேதுங்காவின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற நிலைப்பாடு மாற்றம் கண்டது. இம் மாற்றத்தின் போது முக்கியமாக இரண்டு அம்சங்கள் அவர்களால் முன்வைக்கப்பட்டன. ஒன்று வடக்கு கிழக்கில் இருப்பது இனப்பிரச்சினை அல்ல. பயங்கரவாதப் பிரச்சினை என்பதும், இரண்டாவது இப்பிரச்சினை ஓர் உள்ளூர் பிரச்சினை இதற்கு வெளியாரின் தலையீடு எவையும் தேவையில்லை என்பதும் ஆகும்.

டி பி விஜேதுங்காவின் இந் நிலைப்பாடானது பகிரங்கமாகத் தெளிவாக வலியுறுத்தப்பட்டது. இது உள்நாட்டிலும் வெளிநாட்டில் இருந்தும்சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட பலரது முயற்சிகளைத் தடுத்து நிறுத்தியது டி.பி. விஜேதுங்காவின் இம்முடிவானது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற நிலைப்பாட்டை தெளிவாகவேவெளிக்கொண்டு வந்தது. சமாதானத்திற்கான எத்தகைய சூழல் உருவாவதற்கும் அவர் தடையாகவே இருந்தார்.

ஆனால் இக் காலப்பகுதியில் சிறிலங்கா இராணுவம் வரலாறு காணாத தோல்விகளைச் சந்தித்தது. இதயபூமி 1 ஒப்ரேசன் தவளை ஆகியவற்றில் புலிகளின் பெரும் வெற்றியும், ஒப்பரேசன்யாழ் தேவியில் இராணுவம் சந்தித்த பெரும் தோல்வியும் சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பையே சிதைப்பவையாக அமைந்தன. இவற்றின் பிரதிபலிப்பாக இராணுவத் தளபதி பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது அதேவேளை இனப்பிரச்சினைக்கு இராணுவ தீர்வு சாத்தியமாகுமா என்ற கேள்வியைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்தியது.

இருப்பினும், டி. பி விஜேதுங்கா இவ்விடயத்தில் தனது நிலைப்பாட்டை மாற்றவில்லை. இராணுவக் கட்டமைப்பைச் சீர்செய்வதோடு, துருப்புக்களின் தொகையை அதிகரிக்கவும் அதனை நவீனப்படுத்துவதிலுமே அக்கறை காட்டினார். ஆயிரக் கணக்கான கோடி ரூபா இராணுவத்திற்கென ஒதுக்கப்பட்டது.

இனப்பிரச்சினை விவகாரம் ஒரு புறம் இருக்க டி. பி. விஜேதுங்காவின் பௌத்தசிங்களபேரினவாத தலைமை தாங்க முற்பட்டமையானது, கடந்த 17 வருடங்களுக்கு மேலாக இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் இருந்த உறவைப் பாதிக்கும் அளவிற்குச் சென்றது தொண்டமான் - விஜேதுங்கா வெளிப்படையாகவே முரண்பட்டும் கொண்டனர். எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதேசமயம் டி பி. விஜேதுங்காவின் போக்கு சில முஸ்லிம் தலைவர்களுக்கும் ஏமாற்றத்தைக் கொடுப்பதாகவும் இருந்தது.

ஆனால், இம் முரண்பாடுஏனைய இனங்கள மற்றும் நட்புச்சக்திகளுடன் மட்டும் ஏற்படவில்லை. அவரது கட்சிக்குள்ளேயே முரண்பாட்டையும், மோதலையும் உருவாக்கியது

பிரேமதாசா இருக்கும்வரை அவருடைய கைப்பொம்மை என வர்ணிக்கப்பட்ட டி பி., அவர் இறந்தபின்னர் பதவி ஏற்றதும் முதல் நடவடிக்கையாக பிரேமதாசாவின் குடும்பத்தை அரசியலில் இருந்து ஒதுக்கி வைக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கினார். அதன் பிரகாரம் பிரேமதாசாவின் மனைவி ஹேமா பிரேமதாசா, மகன் சஜித் ஆகியோர் அரசியலில் புறந்தள்ளப்பட்டனர்.

அத்தோடு, பிரேமதாசாவின் அணியினரையும் அரசியலில் இருந்து ஓரம் கட்டவும், அதேசமயம் கட்சிக்குள்ளும், கட்சிக்கு வெளியிலும் உள்ள கண்டியரை முதன்மைப்படுத்தவும் முனைந்தார். இந்தநோக்கிலேயேசுதந்திரக் கட்சியில் இருந்து அநுரா பிரித் தெடுக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்பட்டார். அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது.

இதன் அடுத்த கட்டமே காமினி திசாநயக்காவை டி பி இணைத்துக் கொள்ள முற்பட்டமையாகும், ஆனால், காமினி திசாநாயக்கா இணைப்பு விவகாரமானது, ஐ தே க பிற்குள் டி. பி விஜேதுங்காவிற்கு அடுத்த நிலையில் இருந்த ரணில்விக்கிரமசிங்கா, சிறிசேன கூரே ஆகியோரது நிலையைக் கேள்விக்குள்ளாக்கியதினால் அங்கிருந்து பலமானதொரு எதிர்ப்பு கிளம்பியது. டி பி விஜேதுங்காவின் கண்டிய பௌத்த சிங்கள குழாத்தை உருவாக்கும் முயற்சிக்கு முட்டுக்கட்டையாக அமைந்தது வெளிப்படையாகவே கட்சிக்குள் எதிர்க்கும் நிலையும் உருவாகியது.

டி. பி. விஜேதுங்காவின் கண்டிய பௌத்த சிங்கள உயர் குழாத் தலைமையை ஏற்படுத்தும் முயற்சி இவ்வாறாக வெளியிலும் கட்சிக்குள்ளும் முரண்பாடுகளை வளர்த்துச் செல்ல, மறுவளமாக டி பி விஜேதுங்கா அரசியல் அமைப்பையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி ஜனநாயக அமைப்புக்களைச் சிதைக்க முற்பட்டமையானது எதிர்க்கட்சிகளுடன் முரண்பாட்டை தீவிரமாக வளர்த்துச் செல்வதாக அமைந்தது.

இதில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர் கையில் இருந்ததென் மாகாண சபை அரசாங்கத்தைக் கவிழ்த்த நடவடிக்கையானது அங்கு ஓர் அரசியற் கொந்தளிப்பையே உருவாக்கியது. அத்தோடு டி.பி. விஜேதுங்கா முன்னைய ஜனாதிபதிகள் போன்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஜனநாயக விரோதச் செயல்கள் எதையும் புரிவதற்கு தயாராக உள்ளார் என்பதையும் வெளிக்காட்டுவதாக இருந்தது.

**ஜெயராஜ்**

இந்நிலையில் கடந்த மார்ச் மாத இறுதியில் தென்மாகாண சபைத் தேர்தல் வந்தது. இத்தேர்தலில் டி.பி விஜேதுங்கா தனது நிலையை தெளிவாகவே முன் வைத்தார். பௌத்த சிங்கள பேரினவாதத்தின் தலைவனாக நின்ற அவர் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பதற்கான அங்கீகாரம் பெறும் தேர்தலாக அதை நோக்கினார். இதேசமயம் சிறுபான்மையினர் எவரினதும் உதவி தனக்குத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்தார் அதேசமயம் பிரேமதாசாவின் கொள்கைகள் புறக்கணிக்கப்பட்டுஅவரது சாதனைகள் நினைவு கூராமல் பார்த்துக் கொண்டதோடு பிரேமா ஆதரவாளர்களையும் தேர்தல் பணியில் இருந்தும் ஒதுக்கி வைத்தார்.

இதேசமயம் எதிர்க்கட்சிகள் டி.பி விஜேதுங்காவின் ஜனநாயக மீறல்கள் அதிகாரத் துஷ்பிரயோகம் என்பனவற்றை முக்கிய பிரசாரமாகக் கொண்டன. ஒரு குட்டிப் பொதுத் தேர்தலாகவே கருதப்பட்ட இத்தென் மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் வெளிவந்த போது கடந்த பத்து மாத கால ஆட்சியில் டி பி விஜேதுங்கா தோற்றுப் போய் நின்றார்.

இந்நிலையில் டி. பி. விஜேதுங்காவின் ஒரு வருட ஆட்சியில் மூன்றாவது கால கட்டம் உருவானதெனலாம், இக்காலப்பகுதி, இன்னும் முடிவடையவில்லை. ஆயினும் இதன் முடிவு பெரும்பாலும் இவ்வருட இறுதியில் நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலுடனோ அன்றி பொதுத்தேர்தலுடனோ முடிவடையலாம்,

தேர்தல் தோல்வியானது முற்று முழுதாக பௌத்த-சிங்களப் பேரினவாதத்திற்கு தலைமை தாங்கமுற்படுவதுதனது அதிகாரத்தைபாதுகாத்துக் கொள்ளவும்எதிர்காலத்தில் ஆட்சியைப்பிடிப்பதற்கும்உதவப் போவதில்லை என்ற பாடத்தை அவருக்குத் தெளிவாக புரிய வைத்துள்ளது. இந் நிலையில், முக்கிய இரு பெரும்மாற்றங்களை டி பி, தேர்தலின் பின்னர் கைக்கொள்ளத் தொடங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதில் ஒன்று தென்னிலங்கையில் உள்ள சிறுபான்மை இனங்களுக்கு எதிரான விரோதப் போக்கை வெளிப்படையாகக் கைக் கொள்ளாது அதன் தலைவர்களுடன் அனுசரித்துப் போதல், இரண்டாவது, முன்னர்

(11ஆம் பக்கம்பார்க்க

## ஓராண்டு நினைவலைகள்



பிறப்பு
07.12.1969

வீரச்சாவு
29.04.1993

### லெப். புலித்தேவன்
(சின்னையா தெய்வேந்திரா)

(வவுனியா காவலரண் மோதலில் வீரச்சாவடைந்தார்)

அண்ணனின் பாதையிலே வீறு கொண்ட புலியாக
தேசத்தின் பாதையிலே தியாகப் புலியாக
தமிழீழ அன்னையின் இலட்சியப் புலியாக
வளர்ந்து வரும் வேளையிலே தேசத்துரோகிகளின்
பாதகச் செயலுக்கு இரையாயினையோ?

தொல்பிட்டி,
கோப்பாய் தெற்கு. (சி 9172) - குடும்பத்தினர்


## டென்மார்க்

கொண்டிருந்ததாக தெரிந்தது

விசாரணைக்குழு அறிக்கை வெளியானதும் விடயம் கட்டம் மூன்றில் பிரவேசித்தது. பிரதமர் பதவி விலகி வேறொருவரை பிரதமராக்குவதா? அல்லது புதிய தேர்தலை சந்திப்பதா? என்ற கேள்வி எழுந்தபோது பழமைபேணும் கட்சிக்கு தீர்க்கமான முடிவெடுக்க அறுதிப்பெரும்பான்மை இருக்கவில்லை. அதே வேளை புதிதாக போல் சுலுட்டர் சிபாரிசு செய்த திரு. டுயமுச என்டவரை பிரதமராகக் கொண்டு கூட்டணி அரசு தொடரக்கூடிய நிலையும் இருக்கவில்லை அதே வேளை இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சோசலிசக் குடியரசுக் கட்சி அரசுக்கு ஏற்கனவே ஆதரவுகொடுத்த வேறுசில கட்சிகளுடன் இணைந்து ஆட்சிபீடமேறியது. போல் நிருப் புதிய பிரதமரானார். சுமார் பத்தாண்டுகால பழமைபேணும் கட்சியின்ஆட்சியும்மாறியது

இந்த விவகாரம் இத்துடன் முடிவடையவில்லை. இழைக்கப்பட்ட தவறுக்கு தண்டனைவேண்டும். ''றீஸ்றாட்'' என்ற பாராளுமன்றத்தின் விசாரணைக்குழு பழைய நீதி மந்திரி, இரு பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரின் நடவடிக்கைகளை விசாரிக்கவுள்ளது. கிறேற்ற பங்க மூல. வீ. கோ. பிஷர் ஆகியோர் அடுத்தமுறை தமது தேர்தல் தொகுதியில் வேட்பாளராக நிற்க முடியாதென அத்தொகுதி ஆதரவாளர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இவ்வறிக்கை வெளியாகும் நேரத்தில் டென்மார்க்கில் வாழும் தமிழரிடையே ஒருவித பதற்ற உணர்வு இருந்தது. இலங்கையில் அரசியல் மாற்றங்களால் பல தடவைகள் பாதிக்கப்பட்ட தமிழர்கள், மேற்கண்ட தமிழர் விவகாரத்தால் டென்மார்க் அரசே கவிழ்ந்திருப்பதால் தமக்கு யாதாயினும் பாதகங்கள் நிகழுமா? என ஐயுற்றனர். ஆனால் எந்த அசம்பாவிதங்களுமே நடைபெறவில்லை. இதுபற்றி பல டெனிஷ்காரரிடம் விசாரித்துப் பார்த்தபோது, அவர்கள் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து ஆச்சரியப்பட்டனர். ''நீதிமந்திரியாகட்டும் அகதிகளாகட்டும் அது பிரச்சினைக்குரியவிடயமல்ல. யார் சட்டத்தை மீறினார் என்பதே பிரதானகேள்வி? என்றே நோக்கினர்.

டென்மார்க் பாராளுமன்ற ஜனநாயகத்தில் நீண்ட வரலாறுள்ள நாடு. இந்தப் பிரச்சினையில் ஆட்சியை இழந்த பழமைபேணும் கட்சியினர் கூட தமிழர்கள் மீது தமது காழ்ப்புணர்ச்சியைத் தெரிவிக்கவில்லை. டென்மார்க்கில் தமிழர்களின் வரலாறு ஒரு தசாப்த காலத்தைமட்டுமே கொண்டது. ஆயினும் ''தமிழர் விவகாரம்'' என்ற விசாரணையோ அந்த நாட்டின் அரசாங்கத்தையே மாற்றியுள்ளபோதும், டென்மார்க்கில் வாழும் தமிழர்களின் வாழ்வில் இந்த நிகழ்வு சிறு தாக்கத்தைக்கூட ஏற்படுத்தவில்லையென்ற விவகாரம் இப்பொழுதும் ஆச்சரியம் கலந்த அனுபவமாகவேஉள்ளது


மலிவு விலையில் பல்வகைப் பொருட்கள் கொள்வனவு செய்யவும்
ரூபா 500/ நுக்குமேற்பட்ட கொள்வனவுகள் மூலம் இலவச பரிசுச் சீட்டைகள் பெற்றுக்கொள்ளவும் அன்பளிப்புகளிற்கு அன்பளிப்பு படிவகள் பெற்றுக் கொள்ளவும்

ஆண் பெண் தையல்வேலைகளிற்கும்

# எழிலகம்

லெப், இளங்கோ தெரு,
(மணிக்கூட்டு வீதி)
யாழ்ப்பாணம்

குறிப்பு: ஏப்றில் மாதத்திற்கான பரிசு சீட்டிழுப்பு மே 3ம் திகதி காலை 11 மணியளவில் இடம்பெறும்.

(சி-9294)



## EIGHTH DEATH ANNIVERSARY

BORN
20 - 11 1964



DIED
30 - 04 1986

### Veera Vengai ALISTON
(A. ALISTON MATHURANAYAGAM)

"... One righteous act sets all mankind free and gives them life"
(Ro. 5 : 18)

"Since we have died with Christ, we beleive that we will also live with Him." - Bible

A Requiem High-Mass for the repose of the soul of the departed A. ALISTON will be offered at St. Antony's Church, Manipay, on Saturday, 30th April 1994, at 6 30 a. m.

"Antony Vasa"
Nagammal Road,
Uduvil,
Chunnakam.

Loving
FAMILY.

(8146)



## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
29 - 01 - 1934

மறைவு:
08 - 05 - 1993

### அமரர் திரு. ப. நாகராசா
[முன்னாள் பெற்றோலியம் கூட்டுத்தாபன ஊழியர்]

திதி: 29 - 04 - 1994

எங்கள் அன்புத் தெய்வமே!

நீங்கள் எம்மைவிட்டு மறைந்து இன்று ஓராண்டு கழிந்துவிட்டது. ஆனால் தங்களின் நினைவு ஆண்டு பல கழிந்தாலும் எங்கள மனதைவிட்டு நீங்காது தங்கள் பதங்கட்கு எமது கண்ணீர் அஞ்சலிகள தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

உங்கள் நினைவால் வாடும்

அன்பு மனைவி
" மகன் மருமகள் பேர்த்தி (கனடா)
" மகள் மருமகன் பேர்த்தி [பிரான்ஸ்]
" மகன் (ஜேர்மனி)
" மகன் (சுவிற்சலாந்து)
" மகள் மருமகன் பேர்த்தி (உரும்பராய்)
" மகள், பழனிதுரைசிங்கன் (சகோதரர்)

உற்றார் உறவினர் நண்பர்கள்

உரும்பராய் வடக்கு (8151)



# மே நாள் - 1994

தமிழீழ மக்களின் எழுச்சி நாள்!
தன்னாட்சிக்கான ஆற்றலை அனைத்துலகுக்கும் பறைசாற்றுவோம்
அனைத்து மக்களும் அணி திரண்டு வருக!

- யாழ் வணிகர் கழகம்

(சி-9285)

யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

# புலிகள் விவகாரத்தை மத்திய அரசு அரசியலாக்க முயல்கிறது

## பாரதீய ஜனதா செயலர் தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்க அ. இ. அ. திராவிட முன்னேற்றக் கழக அரசிடம் புதுக் காரணம் கேட்பதன் மூலம் மத்திய அரசு புலிகள் விவகாரத்தை அரசியல்ஆக்குகிறதுஎன்று பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் வெங்கையா நாயுடு நேற்றுச் சென்னையில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

புலிகள் நாட்டின் இயல்புத் தன்மையைக் குலைக்க மற்றத் தீவிரவாத அமைப்புகளுடன் சேர்ந்து செயற்படுகையில், புலிகள் பிரச்சினையை ஒரு மாநிலப் பிரச்சினையாகக் கருதாமல், நாட்டின் இறையாண்மை சம்பந்தப்பட்ட பிரச்சினையாகக் கருத வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

# வடபகுதி இளம்பெண்களை புகைப்படமெடுக்கும் படை

(யாழ்ப்பாணம்)

வட பகுதி பெண்கள் தாண்டிக்குளம் இராணுவ தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு புகைப்படமெடுக்கப்படுகின்றனர்.

சமீப நாட்களாக வடபகுதியிலிருந்து வவுனியா ஊடாக தென் பகுதி நோக்கி பயணம் செய்யும் பெண்கள் வழமையை விட வித்தியாசமான முறையில் இராணுவ உளவாளிகளினால் நடத்தப்படுகின்றனர்.

குறிப்பாக திருமணம் செய்யாத இளம்யுவதிகள் பேயாடி கூழாங் குளம் சோதனை முகாமில் கைது செய்யப்பட்டு, குழுக் குழுவாக பஸ்ஸில் - தாண்டிக் குளம் தடை முகாமிற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இராணுவ புலனாய்வைச் சேர்ந்த பெண் உளவாளிகள் இந்தப் பெண்களை நீண்ட நேரம் விசாரணை செய்கின்றனர்.

மேற்படி பெண்களை அழைத்து வரும் உறவினர்களை வவுனியா புகையிரத நிலையத்திற்கு செல்லுமாறு இராணுவ உளவாளிகள் வற்புறுத்தி அனுப்பி வைக்கின்றனர்-

ஒரு அறையில்பல யுவதிகள் விசாரணை செய்யப்படுகின்றனர்- மாறி மாறி ஆண் பெண் உளவாளிகள் விசாரணை செய்கின்றனர்-

தென் பகுதியில் தங்கும் இடம், தங்கும் காரணம், வட பகுதியில் உள்ள இருப்பிடம், போராளிகளின் நடவடிக்கைகள், தகவல்கள் ஆகியவை உளவாளிகளினால் கேட்கப்படுகின்றன.

பின்னர், நான்கு பேர் கொண்ட குழுவாக நிற்க வைத்து, ஆங்கில 'ஏ, பீ, சீ, டீ' எழுத்துக்கள் கொண்ட அட்டைகள் கழுத்தில் தொங்க விடப்பட்டு, கைகளில் இலக்கத் தகடு பிடிக்க வைத்து படங்கள் பிடிக்கப்படுகின்றன-

குறிப்பாக யாழ்- குடாநாட்டிலிருந்து செல்லும் பெண்கள் கடுமையாக விசாரணை செய்யப்படுகின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளது-

பல மணி நேரம் தடுத்து வைக்கப்படும் யுவதிகள் மிரட்டப்படுகின்றனர்- ஆண் உளவாளிகள் விரும்பத்தகாத முறையில் இளம் யுவதிகளுடன் அணுகுகின்றனர்-

சந்தேகமற்றவர்கள் எனக் கருதப்படுவோர் மட்டும் அன்று இரவு புகையிரதத்தில் செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன- (தி) (ச)

# 36 பல்கலை மாணவருக்கு மகாபொல புலமைப்பரிசில்

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக்கழக 1992/93 மகாபொல புலமைப் பரிசில் பெற 36 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். இவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் ஏழாம் திகதி நடைபெறவுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலிருந்து மகாபொல பரிசில் பெற தகுதியானவர்களுக்கான பரிசில்கள்வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் தம்மால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இவர்களுக்கான காசோலைகள் உரிய காலத்தில் கிடைக்கும் பட்சத்தில் திட்டமிட்டபடி விழா நடைபெறும் எனவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மகாபொல பரிசில் பெறத் தெரிவாகியோர் விபரம் வருமாறு;

திரு. என். சுகுமார், திரு ரீ நிமலரஞ்சன், செல்வி எஸ். சிவபாதம், செல்வி ஆர். யோகலிங்கம், திரு. ஜே ஜே. ஜோர்ஜ், திரு. எச். ஆர். குணரத்தினம், செல்வி ஏ குலராஜசிங்கம், திரு. கே தேவகரன், செல்வி சீ. சண்முகலிங்கம், செல்வி என். சாருலதா, செல்வி எஸ். பாலசுப்பிரமணியம், செல்வி எம். சோமசுந்தரம், செல்வி வீ. ரூபமதி, செல்வி வீ உலகப்பிரகாசம், செல்விவீ. தமிழினி, திரு. எஸ். சங்கர், திரு. ரீ. தயாபரன், திரு. ஜீ. சுந்தரேசன், திரு. ரீ சுதர்ஸன், திரு. ரீ. சேந்தன், செல்வி என். ஜெயவாணி, செல்வி ரீ. கௌதமி, செல்வி பி. சகுந்தலாவாணி, செல்வி எஸ். றாஜிதா, செல்வி ஜீ. ஏகவாணியம், செல்வி வீ. திருவருட்செல்வி, செல்வி எஸ். மேனகா, செல்வி என். சிவப்பிரகாசம், செல்வி ரீ. டானியேல், திரு. பி. பகீரதன், செல்விடபிள்யூ ஏ. அன்ரனற், செல்வி ரீ. தேவ்மினி, திரு எஸ். தயாபரன், திரு. வீ. செபகுமார், செல்வி எஸ் சசிமதி, செல்வி கே. செல்வமலர்.

# பட்டமளிப்பு

யாழ். பிராந்திய திறந்த பல்கலைக் கழகத்தில் பட்ட மேற் கல்வி டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா மிகவிரைவில் நடைபெறவுள்ளது.

இப் பட்டமளிப்பு விழா தொடர்பான ஆவணங்கள் யாழ். பிராந்திய நிலையத்திற்கு எடுத்துவரப் பட்டுள்ளதாகவும் இதற்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காக மேற்படி பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த சகல மாணவர்களையும் இன்று மாலை 2.30 மணியளவில் யாழ். பிராந்திய நிலையத்துக்குச் சமுகமளிக்கும் படியும் பிராந்திய இயக்குநர் திரு. சீ. ஆ. ஞானேந்திரன் கோரியுள்ளார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-04-29 வெள்ளி இரவு

08-01 - கலை மஞ்சரி - நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம்

''தேசியம் பங்குனி மாத சஞ்சிகை''

அதனை அடுத்து சிறு கதை -''பிஞ்சுகளின் நெஞ்சிலே''

அடுத்துகவிதை-'மாவீரன் மண்டியிடான்'

08-30 - செய்திகள்

08-40 - அரசியல் அரங்கம் - ''முழு நிலவில் உதயமாகிய புதிய தென்னாபிரிக்கா''

08-50 - மட்டக்களப்பு முத்துக்கல படுகொலை நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - ''அரச பயங்கரவாதம்''

1994-04-30 - சனி காலை

07-02 - மாவீர வணக்கம்

07-15 - நீங்கள் கேட்டவை

07-30 - செய்திகள்

07-35 - பத்திரிகைச் செய்திகள்

07-40 - தொடர்ந்து நீங்கள் கேட்டவை

# நச்சு வாயு சிலிண்டர் எகிப்திடம் கையளிப்பு

கொழும்புத் துறைமுகத்தில் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்ட பதினெட்டுத் தொன்எடையுள்ள இரசாயன வாயுவைஎகிப்துக்குக்கொண்டு செல்ல அனுமதித்திருப்பதாக இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

கடந்த இரு மாதங்களாக வெளிநாட்டுக் கப்பல்களிலிருந்து கைப்பற்றப்பட்ட இரசாயன வாயுவை எகிப்து நிறுவனம் ஒன்று இறக்குமதி செய்துள்ளது. எகிப்து நாட்டு அரசின் அங்கீகாரத்தை சம்பந்தப்பட்ட இந்த நிறுவனம் பெற்றிருப்பதால் தாம் இதனைக் கொண்டு செல்ல அனுமதித்திருப்பதாக இராணுவ தரப்பில் கூறப்படுகிறது.

# உதைபந்தாட்ட போட்டிகள்

மயிலங்காடு ஞானமுருகன் வி கழகத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்றைய போட்டிகளாக உதயசூரியன் வி- கழகத்தை எதிர்த்து அம்பாள் வி- கழகமும், யங்றோயல் வி- கழகத்தை எதிர்த்து ஸ்கந்தா வி- கழகமும் விளையாடவுள்ளன- போட்டிகள் பிற்பகல் 3-00 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்-

★ ★

அளவெட்டி விநாயகர் வி- கழகத்தால் மகாஜனக் கல்லூரியின் இணுவில் மைதானத்தில் நடாத்தப்படும் சுற்றுப் போட்டியில்இன்றுமாலை 4-00 மணிக்கு கொய்யாத் தோட்டம் ஐக்கிய வி- கழகத்தை எதிர்த்து வட்டுக் கோட்டை வி- கழகம் மோதவுள்ளது-

# அரசு சுவீகரித்த காணிகளுக்கு 30 வருடமாகியும் நட்டஈடு இல்லை

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசு இராணுவ மற்றும் பொது தேவைகளுக்கென சுவீகரித்த காணிகளுக்கான நட்ட ஈட்டுத் தொகையை பொதுமக்களுக்கு பலவருடங்களாகியும் வழங்காதுள்ளது.

யாழ். மாவட்டத்தில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை அமைப்பதற்கென 1964 ம் ஆண்டில் பல ஹெக்டேயர் நிலத்தை சுவீகரித்தது. இதில் ஒருசிலருக்கு இதுவரை அதற்கான நட்டஈடு வழங்கப்படாத நிலையிலேயே உள்ளது.

இதேபோல் காரைநகரில் கடற்படைத்தளவிஸ்தரிப்பிற்கென 1986 ம் ஆண்டில் 30 ஹெக்டேயர் வரையிலான நிலமும் பலாலி இராணுவ முகாம் விஸ்தரிப்பிற்கென 1987 இல் 275 ஹெக்டேயருக்கு மேற்பட்ட நிலமும் அரசினால் சுவீகரிக்கப்பட்டது.

ஆனால் இன்று வரை இவற்றுக்கான நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக அரசு எவ்வித அக்கறையும் செலுத்தவில்லை எனத் தெரிய வந்துள்ளது. இதற்கான நஷ்டஈட்டுத் தொகையை பெற்றுத்தரும்படி காணிகளை பறிகொடுத்த பொது மக்கள் செயலகத்தில் முறையிட்ட பொழுதிலும் கடந்த கால நிர்வாகம் இவ் விடயத்தில் அக்கறை செலுத்திய தாகத் தெரியவில்லை.

இதேவேளை செயலக அதிகாரிகள் காணி உரிமையாளர்களை அழைத்துச் சென்று எல்லைகளைக் கண்டறிந்து அவற்றை அளந்து நட்டஈட்டுத் தொகையை தீர்மானிக்க வேண்டும். ஆனால் இதற்கு படையினர் அனுமதி வழங்க மறுத்து விட்டதுடன் தாம் அவற்றை அளந்து அனுப்புவதாக அறிவித்துள்ள தாகவும் செயலக வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

# மேதின ஊர்வலம், கூட்டம் ஐ. தே. க நடத்தாது

(கொழும்பு)

இவ்வருடத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மேதின ஊர்வலம், கூட்டம் என்பனவற்றை நடத்தாது என கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்தது.

கொல்லப்பட்ட முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் முதலாவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சி தொலைக்காட்சி வானொலி மூலம் சிறிலங்கா ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தொழில் அமைச்சர் ஆகியோரின் விசேட செய்திகள் ஒலிபரப்பப்படும் என தெரியவருகின்றது.

## டி.பி விஜேதுங்காவும்

ஓரம்கட்டப்பட்ட பிரேமதாசா குடும்பத்தினர், அணியினர் ஆகியோரை இணைத்துக் கொள்வதோடு பிரேமதாசாவின்கொள்கையை கடைப்பிடிப்பதாகக் காட்டிக் கொள்ளல், பிரசாரப் படுத்தல் என்பவையாகும்

இவற்றின் வெளிப்பாடே தொண்டமான்-டி பி.விஜேதுங்கா சந்திப்பும், சமாதானமும் ஹேமா - பிரேமதாசா சந்திப்பும், அமைச்சுப் பதவி வழங்குவதான யோசனையும் ஆகும் இந்த வகையில், டி. பி. தனது நிலையைச் சீர்திருத்தும் முயற்சியில் குறுகிய காலத்திற்குள் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளார்

இதேசமயம் காமினி வருகையால் உருவானமுரண்பாட்டைத் தீர்ப்பதில் டி பி க்கு சில நெருக்கடிகள் வெளிப்படையாகவே உள்ளன பிரேமதாசா அணியை வாக்குகளுக்காக ஆதரிக்க வேண்டிய நிலையில் உள்ள டி.பியால் சூரேயை வெளியில் அனுப்புதல் என்பது புதிய சிக்கல் களையும்தேர்தலில் வெற்றிபெறுதல் என்ற அவரது எதிர்காலக் குறிக்கோளுக்கும் தடையாக உருவாகக்கூடும். அதேசமயம் காமினியைக் கைவிடுதல் என்பது நம்பிவந்தவரை நட்டாற்றில் கைவிடுதல் என்பது மட்டுமல்ல அவரது அடி மனத்தில் உள்ள கண்டிய உயர் குழாத்தின் ஆட்சியை நிறுவுதல் என்ற இலட்சியத்திற்கு ஊறுவிளைவிப்பதுமாகும் ஆனால் இவ்விவகாரத்தில் விஜேதுங்கா மிக விரைவில் தீர்மானம் எடுக்க வேண்டிய நிலையில் உள்ளார் என்பது மட்டும் உண்மை.

இதேசமயம் டி பி விஜேதுங்கா தென்மாகாண சபைத்தேர்தலின் பின்னும் தனது நிலைப்பாட்டை மாற்றாது உள்ளவிடயம் இனப்பிரச்சினை தொடர்பானதே ஆகும் தென்மாகாணசபைத் தேர்தல் இராணுவத்தீர்விற்கு எதிரானதுஎனப்பரவலாக விமரிசிக்கப்பட்டபோதும் தோல்வியானது, வடபகுதி மீதான தாக்குதலை ஓரிரு மாதங்கள் பிற்போடவே உதவியுள்ளது போல் உள்ளது. இது தற்காலிகமானதாகும். இதில் அவர் தனது நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை சற்று அடக்கி வாசிக்கிறார் என்பதே நிதர்சனமாகும்.

ஆனால் டி, பி, விஜேதுங்காவின் ஒருவருடகால ஆட்சி என்பது அவரது கற்பிதங்கள், அவர் பற்றிய கற்பிதங்கள் என்பனவற்றை மாற்றியுள்ளது மட்டுமல்ல, குறுகிய காலத்திற்கு தென்னிலங்கை அரசியல் சூழ்நிலையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது இது ஐ, தே, கட்சியின் 17 வருடகால ஆட்சியையும் கேள்விக்குள்ளாகியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை!

நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



### 3 படையினர்

னூர்தி மூலம் அநுராதபுரம் வைத்தியசாலைக்கும் ஏனைய சிறுசிறு காயங்களுக்கு இலக்கான படையினர் வவுனியா வைத்தியசாலைக்கும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக கொழும்பில் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### புலிகள்

கொண்டுள்ளனர்.

இதேசமயம் முன்னேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் படுகாயம் அடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## மே நாள் அன்று
## அணி திரள்வோம்
## 1-5-1994

1-5-1994 அன்று உலகத் தொழிலாளர்கள் தினத்தை சிறப்புடன் கொண்டாட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், மகளிர்குழுக்கள் பணியாளர்களுடனான துறைசார்ந்தோர் அனைவரும் வருகை தந்து அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுடன் நாமும் இணைந்து எமது உரிமைக் குரல் எழுப்பி எம் வாழ்விற்கான போராட்டத்தை முழு உலகும் அறியச் செய்ய அணி திரண்டு வாரீர் என அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

உழைப்பவர் கைகளில் அதிகாரம் ஏறிட
தமிழீழமே பரிகாரம்.

தலைவர்,
வடமாகாண ப. தெ. வ. அ. கூட்டுறவு
நிறுவனங்களின் சமாசம்.

இல: 499, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி-9297)

### யாழ். ஸ்ரீதர் திரையில்...

தினசரி மாலை 4, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10.30 மாலை 4,6மணி

போராளிகளும், மக்களும் இணைந்து
வழங்கும்

## காற்று வெளி

(முழு நீள வர்ணப்படம்)

தரமான கலைப் படைப்பின்
திறமான கருத்தோவியம்

★ மக்களோடு புலிகள்
★ சண்டைக் காட்சிகள்
★ நெஞ்சையுருக்கும் சம்பவங்கள்

உங்கள் இதயங்களில் இடம்பிடிக்கும்
இன்னும் பல அரிய கண்ணைக்கவரும்
வர்ணக் காட்சிகள்

மறவாதீர்கள் காற்றுவெளி
தவறாதீர்கள் பார்த்து மகிழ

கதை
வசனம்
நெறியாள்கை
ஞானரதன்

| ஒளிப்பதிவு | நடிகர்கள் | இசை |
| --- | --- | --- |
| தவா | றியோ | பிரியரராஜ் |
| திலகன் | இரட்ணவடிவேல் | முரளி |
| றியோ | பேபி சரோஜா | |
| | நிசாம் | |
| | மற்றும் மலர் | |

தயாரிப்பு நிதர்சனம்

ஒலிவீச்சு
சனி, ஞாயிறு பி. ப. 2. 30 மணிக்கு
காண்பிக்கப்படும்.

(சி-9265)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஆதரவாளர் வீரச்சாவு



### துணைப்படை வீரர் பகீரதன்

யாழ். மாவட்டத்தில் கடந்த 26ம் திகதி சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிகளின் துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த பகீரதன் (கணபதிப்பிள்ளை வீரகத்தி, கரணவாய் கிழக்கு நெல்லியடி) எனும் துணைப்படை வீரருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### மாணவர் உணவுப் பொருள்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கான ஜூன்செப்ரெம்பர்மாதங்களுக்குரிய உணவுப் பொருட்களை யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதி சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும்விநியோகித்து வருகின்றது

எனவே மாணவர்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் மதிய உணவுமுத்திரைகளைச் சமர்ப்பித்து அதற்கான உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டது (பா)

### ஐ தே க

பினர் கூறுகின்றனர். சிறிசேனகூரே அரசியல் எதிரியாக வரக் கூடிய காமினி திஸநாயக்கா பாராளுமன்றத்துக்கு வருவதை எதிர்த்து வருகிறார். அதே வேளை கூரேக்கும் அவரது குழுவிற்கும் ஈடுகொடுப்பதற்காக காமினியை அமைச்சரவையில் சேர்ப்பதற்கு ஜனாதிபதிடி. பி விஜேதுங்கா ஆவலாக இருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி பிமேதாசாவின் மனைவியின் ஆதரவைப் பெற ஜனாதிபதி முயற்சி செய்து வருகிறார் ஜனாதிபதி கவலை கொண்டிருக்கிறார் என்பதற்கான இன்னொரு அறிகுறி இது ஜனாதிபதி விஜேதுங்கா சென்ற ஆண்டு ஜனாதிபதி பதவி ஏற்றதன் பின்னால் முன்னாள் ஜனாதிபதியின் கொள்கைகளை ஒதுக்கி விட்டதுடன் அரசியல் செல்வாக்குள்ள அவரது மனைவியையும் அலட்சியம் செய்தார் ஆனால் சென்ற மாதம் ஏற்பட்ட தேர்தல் தோல்வி புதியநண்பர்களை தேடுவதை அவசியமாக்கிவிட்டது என்று கூறினார்.

பிரேமதாசா அவர்களின் கொலையின் நினைவு தினத்தை யொட்டி அடுத்த ஞாயிறன்று பல அஞ்சலி விழாக்கள் நடைபெற உள்ளன- கட்சிக்குள் உள்ள மோதல்கள் வெளிப்படும் இறுதி நிலை இவை. ஆனால் அது காலவரையறையின்றித் தாமதப்படுத்தப் படாது.

17 வருட காலமாகப் பதவியிலிருக்கும் யு. என். பி இந்த ஆண்டு இறுதிக்குப் பின்னர் தாக்குப் பிடிக்க மாட்டாது என்று முக்கிய எதிர்க் கட்சி தீவிரமாக நம்புகிறது.

இவ்வாறு பி. பி. ஸி யின் புதிய செய்தியாளர் ஜார்ஜ் ஆர்னி தெரிவிக்கின்றார்.

## வன்னிமோதலில் வீரச்சாவு



கப்டன் அமல்ராஜ்
(நேசன்)



லெப். ரூபன்



2ஆம் லெப்.
இளங்குமணன்
(நெடுமாறன்)



வீரவேங்கை
சின்னக்கண்ணன்



வீரவேங்கை
சிவச்செல்வன்

### தாயார் தீர்மானிப்பார்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவை மறந்திருந்த பலர் இப்போது எமது பக்கம் கவனம் செலுத்துகின்றனர். அரசியலில் தொடர்வதா இல்லையா என்பதை எனது தாயாரே தீர்மானிப்பார் எனபிரேமதாசாவின் புதல்வர் சஜித் பிரேமதாசா தெரிவித்துள்ளார்

பிரேமதாசாவின் வலதுகை என கூறப்பட்ட ஒருவர் இப்போது எந்த அக்கறையும் இல்லாதவராக இருந்தார். கடந்த தென்மாகாண சபை தேர்தலில் ஐ- தே- க- சார்பில் பங்குபற்ற விரும்பினேன். ஆனால் எனது விருப்பம் நிராகரிக்கப்பட்டது

### போட்டி

அஞ்சல் தலைமை அலுவலகம் நடாத்தும் தெற்காசிய நாடுகளைச்சேர்ந்தவர்களுக்கு கடித மூலம் எழுதும் போட்டிக்கான சுற்றறிக்கை ஒன்று பிரதி அஞ்சல் அதிபரினால் பிரதிக் கல்விக் கோட்டங்களுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ள துசிறுவர்களுக்கானஇப்போட்டிக் கட்டுரை ''கடிதமும் நீங்களும் உலகமும்'' என்றதலைப்பில் இக் கட்டுரை அமைய வேண்டும் எனவும் மே மாதம் 31ம் திகதி 94 இல் 16 வயதுக்கு மேற்படாதபாடசாலை சிறுவர்கள் மட்டுமே தகுதியுடையவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது-

மேலதிக விபரங்களை பிரதிக் கல்விக் கோட்டங்களில் அறிந்து கொள்ளலாம்

### கொத்து அளவு

களின் பார்வையில் படும்படி வைக்குமாறும் வேண்டுகோள் விடுத்தோம்

விலைக்கட்டுப்பாடுதொடர்பாக காவல்துறைபொறுப்பாளரால் விடுக்கப்பட்ட இரண்டு அறிக்கைகள்13-4-94 லிலும், 18-4-94லிலும் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டன

இவ்வாறு போதுமான அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டிருந்தும் அரிசி வாணிபர்கள் கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதல் விலையில் அரிசியை விற்பனை செய்து வருவது குறித்து பெரிதும் வருந்துகிறோம்.

விலைக் கட்டுப்பாட்டை மீறுவதற்கு வாய்ப்பாகக் கொத்துக்களைப்பயன்படுத்தி மக்களை ஏமாற்றி கூடுதல் விலையில் அரிசியை விற்பனை செய்கிறார்கள்-

27-04-94 இல் திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கொத்து நாட்டரிசி ரூபா 35 ற்கு விற்கப்பட்டது. இதன் நிறை 1150 கிறாமாக இருந்தது- கட்டுப்பாட்டு விலைப்படி இவ்வரிசி ரூபா 33-90 இற்குவிற்கப்பட்டிருக்க வேண்டும்-

09-05-94 இல் இருந்து வாணிப நடவடிக்கைகளில் கொத்துக்களைப் பயன்படுத்த வேண்டாமென அனைத்து வாணிபர்களையும் தயவாக வேண்டுகிறோம்- மீறுவோர் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைக் கருத்திற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்- பொதுமக்கள் இது தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டுமென வேண்டுகிறோம்- அனைவரதும் நன்மை கருதி மீண்டுமொருமுறை கட்டுப்பாட்டு விலைகளைத் தருகிறோம்.

நாட்டரிசி, தீட்டல்பச்சை என்பன ப, நோ. கூ. சங்கங்களில் 29.00 ரூபா, உடையல் பச்சை ரூபா 28.50 ஆகவும், நாட்டரிசி, தீட்டல் பச்சை என்பன வெளிச்சந்தையில் ரூபா 29. 50, உடையல் பச்சை ரூபா 28.50 ஆகவும் இருக்கும்.